விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 01 சனிக்கிழமை (17.10.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 303

சுவிஸ் விபத்தில்
வடமராட்சியை சேர்ந்த
குடும்பஸ்தர் பலி

23

யாழ்.மருதங்கேணி, கிளிநொச்சி கிருஷ்ணபுரத்தில் கொரோனா சிகிச்சை நிலையம் அமைப்பு

அடுத்த சில நாட்களில் பணிகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், .கிளிநொச்சி மாவட்டங்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோருக்கு சிகிச்சையளிப்பதற்கு மருத்துவ மனைகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் - மருதங் கேணியிலும் கிளிநொச்சி - கிரு ஷ்ணபுரம் பகுதியிலும் குறித்த மருத்துவமனைகள் தயார் செய் யப்படுகின்றன.

யாழ்.மருதங்கேணியில் உரு வாக்கப்படும் கொரோனாத் தொற் றுக்குள்ளானோருக்கு சிகிச் சையளிப் பதற் 23

தற்போதைய நிலையில்

நாடு முழுவதும் கொரோனா அபாயம்!

பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையில் முழு நாட்டையும் கொரோனா தொற்றும் வலயமாக அறிவிக்க நேரிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அறிவித்தாலும் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க)

கொடிகாமம் – கெற்பேலியில்

பெண் ஒருவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் - கெற்பேலி மேற்குப் பகுதியில் காணி யொன்றில் உள்ள மரத்தில இருந்து நேற்று வெள்ளிக்கிழமை 23

சிறிகாந்தா தலைமையில்

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்

நீதியரசர் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி சிறிகாந்தா வின் தலைமையில் தமி ழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி யின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பின ருமான சி.வி. 23

சட்டவிரோத மண் அகழ்வின்போது

சுவர் இடிந்து வீழ்ந்ததில் அரியாலையில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அரியாலை கிழக்கு, உதயபுரம் பகுதியில் மதில் இடிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில், சட்ட விரோத மணல் அகழ் 23

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் யாழில் இன்று ஒன்றுகூடுகின்றனர்

சுமந்திரன் எம்.பியும் பங்கேற்பார்

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் கட்சிகளின் தலைவர் களுக்கான கூட்டம் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு நடை பெறவிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா 'இதற்கான அழை 23

யாழ்.மாநகர சபையிலிருந்து மணிவண்ணனை நீக்குக

உதவித் தேர்தல் ஆணையாளருக்கு தமிழ்க் காங்கிரஸ் கடிதம்

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி வி.மணிவண் ணன் மற்றும் மயூரன் ஆகியோரை யாழ். 23

ஆபத்து நிலை தோன்றினால் ஊரடங்கை தவிர்க்க முடியாது

இராணுவத் தளபதி மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் எந்தவொரு பகுதி யிலும் கொரோனா அதி ஆபத்து நிலை தோன்றினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை யிலான அரசாங்கம் ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்வதைத் தவிர்க்க முடியாதுபோகும் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரி 23

கைக்குண்டுடன்

யாழ்.நகரில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கைக்குண்டு வைத திருந்த குற்றச்சாட்டில் இளை ஞன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் 23

தான்தோன்றித்தனமான அதிகாரங்களை 20ஆவது திருத்தம் வழங்குகின்றது

தேரர்கள் மூவர் ஜனாதிபதி கோட்டாவுக்கு கடிதம்

(கொழும்பு)

தேரர்கள் சிலர் கூட்டாக இணைந்து 20ஆவது திருத் தம் தொடர்பில் ஜனாதிபதி

கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

20ஆவது திருத் 02

நாட்டில் மேலும் 110 பேருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

நாட்டில் மேலும் 110 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இரா ணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அடையாளம்காணப் பட்டவர்களில் 35 பேர் மினு வாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வாக்குரிமை

தெரிவுக் குழுவொன்றை நியமிக்க பிரதமர் மகிந்த முன்மொழிவு

(கொழும்பு)

வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொடுத்தல் உள்ளிட்ட தேர்தல் சட்ட திருத்தத்தை மேற்கொள்வதற்கான தெரிவுக் குழுவொன்றை நியமிப்பதற்கு எதிர்காலத்தில் முன்மொழிவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாய திட்டமிடல் தொடர்பிலான கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த சந்திப்பின்போது விடயங்களை தெளிவுபடுத்திய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, 2020-2024 இற்கான தேர்தல் ஆணைக்குழுவின் மூலோபாய திட்டமிடலுக்கு அமைய தேர்தல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வது அத்தியாவசியமாகும் என சுட்டிக்காட்டினார்.

தேர்தலுக்கான வைப்புத் தொகையில் திருத்தங்களை மேற்கொள்ளல், தேர்தல் இடம்பெறும் தினத்தில் வாக்களிப்பதற்கு முடியாத நபர்களுக்கு அதற்கு முன்னதாக ஒரு தினத்தில் வாக்களிக்க வாய்ப்பளித்தல், 18 வயது பூரணமானவர்களுக்கு வாக்குரிமையை பெற்றுக் கொடுக்கும் வகையில் வாக்காளர் பட்டியலை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பித்தல், தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்தல், வாக்களிப்பு நிலையங்களில் விசேட தேவையுடையோருக்கான வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் விசேட திட்டத்தின் கீழ் இணைய வாக்களிப்பு முறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பிரதமருக்கு விளக்கமளித்தனர். (ம-03)

தான்தோன்றித்...

தம் ஸ்திரமற்ற அரச பொறிமுறையை உருவாக்கும் என தேரர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

முருத்தெட்டுவே ஆனந்த தேரர், பெங்கமுவே நாலக்க தேரர் மற்றும் எல்லே குணவங்ச தேரர் ஆகியோர் இந்த கடிதத்தை எழுதியுள்ளனர்.

20 ஆவது திருத்தம் தான்தோன்றித் தனமான நிறைவேற்றதிகாரத்தை வழங்கும் என்பதுடன், அரசியலமைப்பு பேரவை மற்றும் நீதித்துறையை அது கட்டுப்படுத்தும் நிலையை உருவாக்கும் எனவும் தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக பலவீனமான அமைச்சரவை ஸ்தாபிக்கப்படும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

30 ஆகவுள்ள அமைச்சரவையின் வரையரை நீக்கப்படுவதில் உள்நோக்கம் காணப்படுவதாகவும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்பிற்கு முரணாக ஜனாதிபதி செயற்படும் போது, அது குறித்து நீதிமன்றத்தை நாடுவதற்கு பொதுமக்களுக்குள்ள உரிமையும் 20 ஆவது திருத்தத்தினூடாக நீக்கப்படுவதாக தேரர்களின் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் சட்டவாட்சிக்கு எதிராக ஸ்திரமற்ற அரச பொறிமுறையை உருவாக்கும் வகையில், 20 ஆவது அரசியலமைப்பு திருத்தம் காணப்படுவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அவ்வாறே நிறைவேற்றுவது தொடர்பில் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் தங்களால் பரிந்துரைக்கப்படும் திருத்தங்களையாவது அதில் உள்வாங்குமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-03)

சுத்திகரிப்பு தொழிலாளி தேவை

நிறுவனம் ஒன்றிற்கு சுத்திகரிப்பு தொழிலாளி தேவை. தெல்லிப்பழை பிரதேசத்திற்கு அண்மையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

21.10.2020 ஆம் திகதிக்கு முன்னர் பி.ப. 3.00 மணி தொடக்கம் பி.ப. 6.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

(C-539)

தொடர்பு : 077 662 2078

மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4284)

077 340 5951

e-mail : engchelvam@gmail.com

ஏல விற்பனை

மாபிள் வகைகள், MDF பலகை (8X4), அலுமினியம் பார் வகைகள், பைவர் சீற், PVC பிற்றிங் என்பன 17,18 ஆகிய திகதிகளில் விற்பனை இடம்பெறும்.

இடம் : ரெடி பில் லங்கா பிறைவேற் லிமிடெட், கரந்தன் வீதி, ஊரெழு. (C-538)

VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post up-to **29.10.2020**

Faculty of Medicine

Temporary Scientific Assistant in **Parasitology**

Post	Salary scale
Temporary Scientific Assistant	Rs.48,385 / - (fixed) pm

Qualifications:-

1) A First or Second class (Upper Division) in a special Degree Examination in the relevant subject. **OR**
2) A Second class (Lower Division) in a Special Degree Examination in the relevant subject. **OR**
3) An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject. **OR**
4) An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

Note :- Preference will be given to those who had the hands on experience in laboratory experiments during their undergraduate period in any of the fields: Medical Laboratory Sciences, Molecular Biology ,Biotechnology, Agriculture & Human Biology.

Perfected application shall be sent to the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.

Application forms will be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs. 100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar / Faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs. 100 / - per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self - addressed stamped envelope 23x10 cm in size along with the paid Bank Slip to the above address.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA.
16.10.2020

(C-536)

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர். மாரிமுத்து சிவகுமார்

(சிரேஷ்ட ஆசிரியர், யாழ். உசன் இராமநாதன் ம.வி.)
சிங்கள மொழி வளவாளர் (NILET)

15.09.2020 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் திரு.மாரிமுத்து சிவகுமார் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் 15.10.2020 வியாழக் கிழமை காலை 7 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிரியை 17.10.2020 இன்று சனிக் கிழமை மு.ப 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். மேலும் அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவி புரிந்து ஒத்துழைப்பு நல்கிய யா/உசன் இராமநாதன் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் யா/போக்கட்டி அ.த.க.பாடசாலைச் சமூகம், யா/போக்கட்டி றோ.க.த.க, யா/விடத்தற்பளை கமலாசனி பாடசாலைச் சமூகம், NILET வளவாளர்கள் உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய நமது அயல் நாட்டு உறவுகள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

நீ.மு:-மாவைகலட்டி, தெல்லிப்பளை.
வதிவிட முகவரி: தவசிகுளம், கொடிகாமம்.

0776315915 குடும்பத்தினர்

(4246)

நாட்டில் கொரோனா வைரஸை ஒழிப்பதனூடே
அரசின் மேல் மக்கள் கொண்ட நம்பிக்கையை காப்பாற்ற முடியும்
குணதாஸ அமரசேகர அறிவுரை

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் இடம் பெற்ற பல்வேறு சம்பவங்களின் அடிப்படையில் நோக்குகையில் கொவிட் - 19 வைரஸ் பரவல் சமூகத்தொற்றாக மாறியிருக்கிறதா? என்றும் வைரஸ் பரவலின் நான்காவது கட்டத்தில் இலங்கை இருக்கிறதா? என்றும் சந்தேகம் ஏற்படுவதாக தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குணதாஸ அமரசேகர தெரிவித்திருக்கிறார்.

எனவே சந்தேகத்திற்கிடமான அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டு கொரோனா வைரஸ் சமூகத்தின் மத்தியில் பரவிக்கொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டு அதற்கு ஏற்றவாறான நடவடிக்கைகளை எடுப்பதன் ஊடாக அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கொவிட் - 19 பரவலின் இரண்டாம் அலையைக் கட்டுப்படுத்துவதுடன் தொடர்புபட்டதாக தற்போது நிலவும் பாரதூரத்தன்மை குறித்து தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் குணதாஸ அமரசேகர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொவிட் - 19 வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஆரம்பமாகியிருப்பதுடன் இணைந்ததாக சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் வெள்வேறு தரப்பினர் மீது குற்றஞ் சுமத்திக்கொண்டிருப்பது இரகசியமான விடயமல்ல.

இந்த நிலைவரமானது வைரஸ் தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்துவதில் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அவர்களின் நம்பிக்கையை உறுதி செய்தல் ஆகிய விடயங்களின் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அதுமாத்திரமன்றி கொவிட் - 19 பரவலின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்துவதில் உங்களின் தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்கம் அடைந்து கொண்ட வெற்றியினால் மக்கள் மத்தியில் பெற்றுக்கொண்ட நன்மதிப்பு, கௌரவம் ஆகியவற்றின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

பொருட்கள் அதிக விலைக்கு விற்பனை
நுகர்வோர் அதிகார சபைக்கு இதுவரை 76 முறைப்பாடுகள்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்தமை தொடர்பாக 76 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண பதில் உதவி பணிப்பாளர் ஏ.எல்.யவ்பர் சாதிக் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள கொரோனாத் தொற்று அனர்த்த நிலைமை காரணமாக பருப்பு, சீனி மற்றும் ரின்மீன் ஆகிய பொருட்களின் இறக்குமதி வரி விலக்கப்பட்டு பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில்,

யாழ்.மாவட்டத்தில் குறித்த பொருட்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படவில்லை எனவும், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினருக்கு இன்று வரை 76 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் சாதிக் மேலும் தெரிவித்துள்ளார்.

021 222 5000

அத்தோடு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருவதாக தெரிவித்த அவர் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையங்களிற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் சென்று ஆராய்ந்தபோது, வர்த்தகர்கள் தாம் பழைய விலைக்கு கொள்வனவு செய்து இருப்பில் உள்ள பொருட்களை பழைய விலைக்கு விற்பனை செய்வதாகவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய விலைக்கு கொள்வனவு செய்யும் பொருட்களை அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்வதாகவும் தெரிவித்துள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைமை அலுவலகத்துடன் கலந்தாலோசித்து வருவதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் வடக்கு மாகாண பதில் உதவிப் பணிப்பாளர் ஏ.எல்.யவ்பர் சாதிக் தெரிவித்துள்ளார். (நி-5-33)

ஊடகவியலாளருக்கு கொரோனா? பங்கேற்றவர்கள் சுய தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றவர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற ஊடக வியலாளர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்ப்பட்டுள்ளதாக சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆகவே ஏனைய ஊடகவியலாளர்களையும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து ஊடகவியலாளர்களின் விபரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளது. அவர்களுக்கு சுகாதாரத்துறை விரைவில் சுகாதார ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கும் என்றும் அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது ஊடகவியலாளர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரா? இல்லையா? என்பது தொடர்பாக சோதனை முடிவுகள் கிடைக்கும் வரை ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து ஊடக வியலாளர்களும் பாதுகாப்பாக இருக்குமாறு அத்திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (நி-7)

தேசிய பாதுகாப்பு விடயத்தில் நாடு இன்னும் பீதியில்
பீரிஸ் சாடல்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் காரணமாக நாடு இன்னும் பீதியிலேயே உள்ளதென கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குறிப்பாக 2015 முதல் 2019 வரை நாட்டில் தேசிய பாதுகாப்பு மீது சர்வதேச அழுத்தம் இருந்தது. அப்போதைய பாதுகாப்புச் செயலாளராக இருந்த தற்போதைய ஜனாதிபதி, கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக நாட்டைச் சூழ்ந்திருந்த விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டை காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை மேற் கொள்வதில் உளவுத் துறையுடன் நெருக்கமான உறவுகளைப் பேணி வந்தார்.

குறிப்பாக, உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு குடியேற்றவாசிகளை கையாள சிறப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடவுச்சீட்டு வழங்கும்போது இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டினரின் சுற்றுப்புறங்களை முறையாக ஆய்வு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டு இருந்தது.

ஆனால் கடந்த காலத்தில் அவ்வாறான செயற்பாடுகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. உதாரணமாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முன்னாள் ஜ.ஜி.பி மற்றும் பாதுகாப்பு செயலாளர் கூறிய கருத்துக்கள் அவர்கள் தேசிய பாதுகாப்பை எவ்வாறு கையாண்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

தற்போதைய நிலையில் நாடு முழுவதும் தொற்று வலயமாக அறிவிக்க நேரலாம்
எச்சரிக்கிறார் ரோஹண



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமையில் முழு நாட்டையும் கொரோனாத் தொற்றும் வலயமாக அறிவிக்க நேரிடும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இவ்வாறு அறிவித்தாலும் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என வும் அவர் கூறியுள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களை வழமை போல் இயக்க முடியும். சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நிறுவனங்களின் பிரதானிகள் கடமை.

அதிகளவான ஊழியர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் தினமும் சேவைக்கு வரக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கையை பிரதேச சுகாதார அதிகாரிகள் தீர்மானிப்பார்கள்.

இவ்வாறு வரும் ஊழியர்கள் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது கட்டாயம் என்பதுடன் அடிக்கடி உடல் உஷ்ணத்தை கண்காணிக்க வேண்டும் எனவும் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (நி-7)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது மீண்டும் மறுத்தார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

தாம் வெளிநாடு செல்வதற்கு முன்னர் பயங்கரவாத தாக்குதல் மேற்கொள்ளப்படலாம் என தகவல்கள் கிடைத்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மூன்றாவது நாளாக கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சி வழங்கினார். மைத்திரிபால சிறிசேன வெளிநாடு செல்வதற்கு முன்னர் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் திகதியில் இருந்து ஏப்ரல் 16 ஆம் திகதி வரை அரச புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன பல சந்தர்ப்பங்களில் தொலைபேசியூடாக அவருடன் தொடர்பு கொண்டுள்ளமை ஆய்வறிக்கை மூலம் தெரியவருவதாக இதன்போது குறுக்கு கேள்வியெழுப்பிய மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

அதில் ஒரு சந்தர்ப்பத்திலாவது ஏப்ரல் 4 ஆம் திகதி வெளிநாட்டு புலனாய்வுப் பிரிவில் இருந்து கிடைத்த தகவல்கள் தொடர்பில் அறிவிக்கவில்லையா? என இதன்போது அவர் வினவியுள்ளார். அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, அவ்வாறு நிலந்த ஜயவர்த்தன தமக்கு அறிவிக்கவில்லையென குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து புலனாய்வுத் தகவல்கள் தொடர்பிலும் ஜனாதிபதி என்ற வகையில் தமக்கு அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் அரச புலனாய்வு பணிப்பாளர் அந்த தகவல் தொடர்பில் தனக்கு அறிவிக்காமை பாரிய தவறு என சிங்கப்பூருக்கான விஜயத்தின் போது பெஜட் வீதி உத்தியோகபூர்வ இல்லத்தினூடாக அரச புலனாய்வு பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன முன்னாள் ஜனாதிபதியை தொலைபேசியூடாக தொடர்புகொண்டாரா? என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் இதன்போது மீண்டும் வினவினார். அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, நிலந்த தன்னுடன் பேசியதாகவும் இலங்கையில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு பாரிய அழிவு ஏற்பட்டுள்ளதாகவும் தனக்கு அறிவித்ததாக அவர் பதிலளித்துள்ளார்.

எனினும், அந்த தொலைபேசி அழைப்பு குண்டுத்தாக்குதலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார். அவ்வாறென்றால் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அவரால் எவ்வாறு கூறமுடியும் என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

எனக்கு காலை வேளையில் தொலைபேசி அழைப்பு கிடைத்ததாக ஞாபகமில்லை. ஏனென்றால், அவ்வேளையில் நான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தேன். மற்றைய விடயம் இலங்கை நேரத்திற்கும் சிங்கப்பூர் நேரத்திற்கும் இடையில் இரண்டரை மணித்தியால வித்தியாசம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் தொலைபேசி பகுப்பாய்வு அறிக்கையை சமர்ப்பித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், அங்கு இலங்கை நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன், அந்த தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு பணிப்பாளர் தாக்குதலுக்கு முன்னரே தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி தமக்கு அது குறித்து ஞாபகமில்லையென கூறியுள்ளார்.

வெளிநாடு செல்லும் போது பதில் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரை நியமித்து விட்டு செல்லும் அளவிற்கு நாட்டின் பாதுகாப்பு பாதகமான நிலை யில் இருக்கவில்லையென சுட்டிக் காட்டிய அவர் தற்போது காணப்படும் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தன்னை தொடர்புகொள்வதற்கு இயலுமை இருந்ததாகவும் எந்தளவு தொழில்நுட்ப வளர்ச்சி காணப்பட்டாலும் அரச புலனாய்வுப் பிரிவு போன்ற பொறுப்பு வாய்ந்த பாதுகாப்பு பிரிவின் அதிகாரியொருவரினால் ஏன் உங்களை தொடர்பு கொள்ள முடியவில்லையென இதன் போது நீதிபதிகள் குழாம் வினவியுள்ளது.

அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, தான் 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும், தனது பிரத்தியேக பாதுகாப்பு உத்தியோகத்தருக்குக்கூட நெருங்க முடியாமல் இருந்ததாகவும் பதிலளித்துள்ளார்.

தாக்குதலை தடுக்காமைக்கான பொறுப்பை முன்னாள் பொலிஸ்மா அதிபரை ஏற்றுக் கொள்ளக் கூறியதாகவும் அவர் விரும்பும் எந்தவொரு நாட்டிற்கும் தூதுவராக நியமிப்பதாகக் கூறியதாகவும் தெரிவிக்கப்படும் விடயம் பொய்யானது என மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழுவில் கூறியுள்ளார்.

தாக்குதலின் பின்னர் சிநேக பூர்வ நாடுகளின் புலனாய்வுப் பிரிவினர், இரண்டு மாதங்கள் நாட்டில் தங்கியிருந்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு நேரடியாக ஆலோசனை வழங்கியதாகவோ அல்லது அவர்களுடனான தொடர்பு குறித்தோ கண்டறியப்படவில்லையெனவும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

வத்தளைப் பகுதியில் 23 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 23 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வத்தளைக்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதக ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வத்தளையில் அமைந்துள்ள 88 வீடுகளில் வசிப்பவர்களை தங்களது குடியிருப்புகளில் சுயமாக தனிமைப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

போபிட்டிய, உஸ்வட்ட கெய்யாவ, கெரவலப்பிட்டிய, ஹெந்தலை, திக்கோவிட்ட மற்றும் வெலிசறை பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தலில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 397 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை முழுமையாக நிறைவு செய்த 397 பேர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த 53 ஆயிரத்து 11 பேர் இதுவரையில் மொத்தமாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டில் முப்படையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 84 தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களில் 9 ஆயிரத்து 556 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல்களில் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேவேளை நேற்று காலை அவுஸ்திரேலியாவின் சிட்னியில் இருந்த நாட்டிற்கு வருகை தந்த 12 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பறவைகள் சரணாலயத்தில் தீ



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட இயற்கை பறவைகள் சரணாலயம் உள்ள பகுதியில் ஏற்பட்ட தீயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாநகர சபையின் நுழைவாயிலில் பிள்ளையாரடி-கொக்குவில் பகுதியில் உள்ள இயற்கை பறவைகள் சரணாலயம் பகுதியில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியானது நீண்ட நிலப்பரப்பினைக் கொண்டதுடன் சதுப்பு நிலங்களையும் கொண்ட பகுதியாகவும் உலகின் பல பாகங்களில் இருந்து ஒவ்வொரு காலநிலைக்கும் பலவிதமான பறவைகள் இங்கு வந்து செல்கின்றன.

அண்மைக்காலமாக இப் பகுதியினை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அரசாங்கத்தினால் இப்பகுதி பறவைகள் சரணாலயம் என அறிவிக்கப்பட்டது. எனினும், அதனையும் மீறி அப்பகுதியில் அத்து மீறிய செயற்பாடுகள் இடம் பெற்றுவரும் நிலையில் இந்த தீவிபத்து சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தத் தீ காரணமாக சுமார் நான்கு ஏக்கருக்கு அதிகமான காடுகள் அழிந்துள்ளதுடன் தொடர்ந்து பரவும் தீயினைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

'20' தொடர்பான இரண்டாவது வாசிப்புக்கு திகதி நிர்ணயம்

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தின், இரண்டாவது வாசிப்புக்கான திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரண்டாவது வாசிப்பை எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு குறித்து மூன்று நாள் விவாதமொன்றை வழங்குமாறு, எதிர்க்கட்சியினால் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைரான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (ஜ-4)

யாழ்.மத்திய பேருந்து நிலைய தற்காலிக கடை நடத்துநர்களுடன் யாழ்.மேயர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளில் மாநகரசபையின் அனுமதியுமின்றி இயங்கிவரும் மணிக்கடைகள், பழங்கள் விற்பனை, சிற்றுண்டிகள் விற்பனை உள்ளிட்ட தற்காலிக கடைகளை அகற்றுவது தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாநகர முதல்வருக்கும் - 67 தற்காலிக கடை நடத்துநர்களுக்குமிடையில் கடந்த 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.மாநகர பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட முதல்வர் ஆனல்ட், எம்மால் முன்மொழியப்பட்டு மத்திய அரசால் முன்னெடுக்கப்படவுள்ள யாழ்.மத்திய பேருந்து நிலையம் மற்றும் அதனுடன் அமைந்த வர்த்தகக் கட்டடத் தொகுதி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு முயற்சிகளும் உயர் மட்ட கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்பட்டு கடந்த வருடம் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனுமதியற்ற விற்பனை நிலையங்களினால் அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்பட்டது.

அதன் காரணமாக குறித்த திட்டம் உரிய காலப்பகுதியில் ஆரம்பிக்க முடியாத நிலைமைக்குத்தள்ளப்பட்டது.

எமது அனுமதியின்றி தற்காலிகமாக கடைகளை நடத்திவரும் 67 கடை நடத்துநர்களுக்கும் பல தடவைகளில் எழுத்து மூலமாகக் கடைகளை அகற்றி குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டிருந்தோம்.

இருப்பினும் எவரும் குறித்த அறிவித்தலைக் கருத்திற் கொண்டு செயற்படாமை எமக்கு மிகுந்த சங்கடங்களை உருவாக்கியுள்ளது. மாநகரின் நகர அபிவிருத்திக்குத் தடையாக தாங்கள் இருந்துவிடக் கூடாது என்பதை அன்புரிமையோடு கூறிவைக்க விரும்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

குறித்த திட்டத்தை இவ் வருட இறுதிக்குள் ஆரம்பித்து வைக்க அடுத்த கட்ட முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இடத்தை திட்டத்திற்கு ஏற்ற வாறு ஒழுங்குபடுத்தி கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில்தான் திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க முடியும்.

அனைவரும் இதற்கு ஒத்துழைப்புக்களை வழங்கி தத்தமது கடைகளை அகற்றுவதற்கு முன்வருமாறு கேட்டுக் கொண்டார்.

குறித்த இடத்தில் அமைக்கப்படும் வர்த்தக கட்டடத் தொகுதியில் இங்கு தற்காலிக கடை நடத்திய 67 பேருக்கும் முன்னுரிமை அடிப்படையில் கடை வழங்குவதை மாநகரசபை தற்பொழுது உறுதி செய்யுமானால் தாம் கடைகளை அகற்றி அபிவிருத்தித் திட்டம் முடியும் வரை பிறிதொரு இடத்தை நோக்கி நகர்ந்து குறித்து மாநகரசபைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று குறிப்பிட்டனர்.

இதற்கு பதிலளித்த முதல்வர் அவ்வாறு நேரடியாக வழங்க முடியாது என்றும் மாநகர சபை சட்ட விதிமுறைகளுக்கு அமையவே கடைகள் வழங்கப்படும் என்றும் வேண்டுமானால் பல வருடங்களாக கடைகளை நடத்திய தங்களது வாழ்வாதாரமும் தங்களது குடும்பங்களும் பாதிக்கப்படக் கூடாது என்ற மனிதாபிமான அடிப்படையில் ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்து உங்களில் சில பிரதிநிதிகளையும் குறித்த கலந்துரையாடலில் பங்கெடுக்கச் செய்து ஆளுநரின் அனுமதியுடன், சபையில் சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் பேருந்து நிலைய வர்த்தக கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு எதிர் காலத்தில் கடைகள் வழங்கப்படும் பொழுது இந்த 67 பேரும் விண்ணப்பிக்கின்ற போது முன்னிலை அடிப்படையில் உள்வாங்குவது குறித்து மாநகரசபை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும் என்ற சபைத் தீர்மானத்தை எடுத்து ஆளுநரின் அனுமதி பெற்று அதனை மாநகரசபையின் தற்போதைய சபை இல்லாதுவிடினும் தாங்கள் பாதிப்படையாத வண்ணம் தங்களுக்கான உறுதிப்படுத்தலை நாம் செய்து தர முயற்சிக்கின்றோம் என்று முதல்வர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் யாழ். மாநகர ஆணையாளர், செயலாளர், பிரதம வருமானவரிப் பரிசோதகர், மாநகரசபை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5-4)

விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் முகாமைத்துவப் பட்டக் கற்கை நெறிக்கு 2020 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரி ஊடாக 10.11.2020 இற்கு முன்னராக விண்ணப்பிக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினை தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (5)

றியாஜ் பதியுதீன் விவகாரம் பேராயர் இடையீட்டு மனு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் சகோதரர்களில் ஒருவரான றியாஜ் பதியுதீன் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் கட்டளையைப் பிறப்பிக்க வேண்டாமென மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவர் தொடர்பில் மீண்டும் விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் பதில் பொலிஸ்மா அதிபருக்குக் கட்டளையிடுமாறும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அவர் சார்பில் அவருடைய சட்டத்தரணியே மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் மனுவை நேற்றுத் தாக்கல் செய்துள்ளார். (ஜ-4)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவற்குழி மற்றும் கைதடி பகுதிகளில் வைத்து வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதில் ஒருவர் 40 கிராம் கஞ்சாவினையும் மற்றைய நபர் 20 கிராம் கஞ்சாவினையும் உடைமையில் வைத்திருந்தமைக்காக கைது செய்யப்பட்டனர்.

இருவரையும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்தியதில் இருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

இரு வேறு இடங்களில் இருவர் கஞ்சாவுடன் கைது

சாவகச்சேரி மதுவரிப் பொறுப்பதிகாரி இன்டிக தலைமையிலான சாவகச்சேரி மதுவரித் திணைக்கள பரிசோதகர் வீரதுங்க, சார்ஜன் ஸ்ரீபவன் மற்றும் மதுவரி உத்தியோகத்தர்களான நிமால், றொட்னி, சுபோஸ்குமார் மற்றும் பண்டார உள்ளிட்ட குழுவினர் இக்கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

ஆமை இறைச்சியுடன் ஒருவர் கைது

(குப்பிழான்)

இளவாலையில் கடல் ஆமை இறைச்சியுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்படி நபர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 35 கிலோ கிராம் நிறையுடைய கடல் ஆமை இறைச்சியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (5-4-18)

6 பொலிஸாருக்கும் தொற்றில்லை

(கொழும்பு)

ஹபராதுவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 6 பொலிஸாருக்குப் கொரோனா வைரஸ் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹபராதுவ சுகாதார வைத்திய அதிகாரி ப்ரமோத சிறிவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "பொலிஸ் அதிகாரிகளுடைய பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் இன்று எமக்கு கிடைக்கப்பெற்றது.

அதில், அவர்களுக்குத்தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் தனிமைப்படுத்தலில் உள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பொலிஸ் அதிகாரிகளில் ஒருவர், கொரோனாத் தொற்றாளர் ஒருவருடன் தொடர்பில் இருந்தமையினால் அவருடன் சேர்ந்து ஏனைய 5 பொலிஸ் அதிகாரிகளும் தனிமைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பிரபல நடிகை காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் பிரபல நடிகை அனுலா புளத்சிங்கள தனது 73 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

உடல்நலக் குறைவு காரணமாக ஸ்ரீ ஜெயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார். (ஜ-4)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் பரிசளிப்பு, கலை நிகழ்வுகளும் அண்மையில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றன.

மோட்டார் சைக்கிள் இருக்கைகள் உடைக்கப்பட்டு திருட்டு

கட்டுப்படுத்த மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி நல்லூர் ஆலயத்தை அண்மித்த பகுதிகளில் நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களின் இருக்கைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

நல்லூர் ஆலயத்திற்கு வழிபடச் செல்லும் பக்தர்கள் கோவிலுக்கு அண்மையிலுள்ள வீதிகளில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தி வைத்து விட்டு முருகனை தரிசிக்கச் செல்கின்றனர். அதனை அவதானிக்கும் திருடர்களால் மோட்டார் சைக்கிள் இருக்கைகள் உடைக்கப்பட்டு திருட்டு சம்பவங்கள் இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான திருட்டுக்கள் அண்மைக் காலமாக அதிகரித்துக் காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (நி)

வாகனம் மோதி பாதுகாப்புத் துலா சேதம்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-கச்சாய் வீதியில் அமைந்துள்ள புகையிரதக் கடவைப் பாதுகாப்புக் கம்பம் பட்டா வாகனம் மோதியதில் சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. புகையிரதம் வரும் வேளையில் சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்புத் தடுப்பு கம்பம் ஆகிய இயக்க நிலையில் இருந்த போதிலும் வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் தடுப்புக்-கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது புகையிரதக் கடவையின் ஒரு பக்கப் பாதுகாப்புக் கம்பம் முற்றாகச் சேதமடைந்துள்ளது.(5-4-30)

இரத்ததான முகாம்

(குப்பிழான்)

ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஏழாலை இசிதோர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள புனித ஞானப்பிரகாசியார் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

உரிய அனுமதிகள் பெற்று இடம்பெறும் இவ் இரத்ததான முகாமில் இளையோர் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து கொண்டு உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

வட்டுக்கோட்டை தபாலகத்தில் உலக அஞ்சல் தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட நிகழ்வில் தபாலதிபரும் ஊழியர்களும் தேசியக் கொடியேற்றுவதையும் சத்தியப்பிரமாணம் செய்வதையும் படத்தில் காணலாம்.

மத்திய கலாசார நிலையத்திற்கு வளவாளர்களை இணைத்துக்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் அளவெட்டிப் பகுதியில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையம் மற்றும் கிராமிய நிலையங்களில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரமும் வடிவமைப்பும், நாடகமும் அரங்கியலும், சிங்களமொழி, ஆங்கிலமொழி மற்றும் இசை வாத்தியக் கருவிகள் ஆகிய பாடநெறிகளை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டுள்ளது.

எனவே குறித்த பாட நெறிகளைக் கற்பிக்க ஆர்வமுடைய தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வளவாளர்கள் (ஆசிரியர்கள்) தங்களது சுயவிபரங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 077 977 0732, 075 976 9654 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அளவெட்டி கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி சி.மகிந்தன் அறிவித்துள்ளார். (5)

சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் மாலை 4 மணியளவில் அபிஷேகம் இடம்பெற்று அதனைத்தொடர்ந்து மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜைகள் இடம்பெறும்.

அதன் பின்னர் விநாயகப் பெருமான் வீதிவலம் வருவதுடன் நிறைவுபெறும். (5)

சுகாதார உதவியாளர் பணிக்கு ஆளணியை பெற்றுத்தரக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சுகாதார உதவியாளர்களின் பணி தற்போதைய சூழ் நிலையில் அதிகரித்துக் காணப்படுகிறது என யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கொவிட்-19 தொற்றுக் காலத்தில் சுகாதார பணியாளர்களின் தேவை அதிகமாகக் காணப்படுவதால் புதிய சுகாதார உதவியாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனை யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

கம்பஹா மினுவாங்கொட பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து நாட்டில் கொரோனா பற்றிய அச்ச நிலை அதிகரித்துக் காணப்படுகிறது.

தனிமைப்படுத்தல்கள், பி.சி.ஆர்.பரிசோதனைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. ஒவ்வொரு நாளும் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

விபத்தில் முதியவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -தனங்கிளப்பு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவரை கார் மோதியதில் முதியவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரிடச் வீதியைச் சேர்ந்த 75 வயது முதியவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(5-4-30)

குணமடைந்தோர் 3385

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 5 பேர் குணமடைந்துள்ளனர்.

சுகாதார அமைச்சு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மொத்தமாக குணமடைந்தோர் எண்ணிக்கை 3 ஆயிரத்து 385 ஆக உயர்வடைந்துள்ளது. (ஜ-4)

பருத்தித்துறை நகர சபை வரவு - செலவுத்திட்டம் - 2021 பொதுமக்கள் பார்வைக்கு

பருத்தித்துறை நகர சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக்கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) பிரிவு 178 (1) இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு, பிரிவு 178 (3) இற்கு அமைவாக 16.10.2020 ஆம் திகதி தொடக்கம் 29.10.2020 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் நகர சபை அலுவலகத்திலும் பருத்தித்துறை நகர சபை பொது நூலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

யோ.இருதயராசா,
தவிசாளர்,
பருத்தித்துறை நகர சபை.

(C-534)

அதிமேதகு ஜனாதிபதியினதும்
கௌரவ பிரதமரினதும்
சிந்னையின் செயல்வடிவம்

வடக்கின் விவசாயம் மீட்சி

North Lanka IIT City Campus
Faculty of Agriculture

Agriculture Research உடன் இணைந்த பயிற்சி
கல்லூரியுடன் கூடிய Modern Research Farm
Kariyalai Nakapaduvaan, Poonakary.

Proposed by – S.A.Balasubramaniyam Reading Ph.D
Rector - North Lanka IIT
City Campus
Faculty of Agriculture

Proposed Presented - Divisional Secretary
Divisional Secretariat
Poonakary
Kilinochchi.

Location –
Kariyalai Nakapaduvaan
Poonakary Divisional

NORTH LANKA RESEARCH FOUNDATION

B.Sc விவசாய விஞ்ஞான பாடநெறிக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முதலாவது பிரிவில்
30 மாணவர்களுக்கு மட்டுமே
அனுமதிக்கப்படுவர்.
UGC அங்கீகாரம் உடைய
பல்கலைக்கழகம்

தகமை - NVQ Level 04 / O/L / A/L
Duration: 03 Years முழுநேரப் பயிற்சி
விண்ணப்ப முடிவுத் திகதி: 20.10.2020

கற்கைநெறி ஆரம்பம்
23.10.2020

தொடர்புகளுக்கு: 076 7504535, 077 8849677, 077 8657957

(C-535)

பெயர் மாற்றம்

சங்குவேலி வடக்கு மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட பிரதாபன் பிரசன்னா ஆகிய எனது பெயரை பிரதாபன் பிரசாளினி இனிவரும் காலங்களில் என மாற்றம் செய்து என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அறியத் தருகின்றேன்.

(4279) உண்மையுள்ள பிரதாபன் பிரசாளினி

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

தொழிலகம் திறப்புவிழா அழைப்பிதழ்

கதிர்காழு கம்மாலை



பேரன்புடையீர்!,

நிகழும் சார்வரி வருடம் ஐப்பசி மாதம் 03 ம் நாள் (19.10.2020) திங்கட்கிழமை பகல் 12.04 மணிமுதல் 1.30 வரையுள்ள சுப வேளையில் இல.02, கனகசபை கட்டடம், பருத்தித்துறை வீதி, நெல்லியடி, கரவெட்டி என்னும் முகவரியில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள **"கதிர்காழு கம்மாலை"** எனும் தொழிலகம், நெல்லியடி முத்த வர்த்தகர் திரு.சு.சண்முகசுந்தரம் (செல்லமுத்தாஸ் புடைவையகம்) அவர்களால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு, பணிகள் ஆரம்பித்த வைக்கப்படும்.

இந்நிகழ்வில் எமது அன்புள்ளங்கள் வந்து கலந்து சிறப்பித்து எமது தொழிலகத்தை ஆசீர்வதித்து, வாழ்த்தி ஆதரவு தரப் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:
இவ்வழைப்பை நேரில் வழங்க கால நேரம், இடம் தராமையால் எம்மை மன்னித்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்
க.புலேந்திரன் 077 3535 785
கு.கிஷாந் 077 502 1316
கலைமகள் ஒலி.ஒளி அல்வாய்.

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: செவ் 3 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: பட்டதாரி சுவிஸில் வேலை செய்கின்றார்
எதிர்பார்ப்பு: பட்டதாரி பெண்
தொ.இ: B/8939

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில் பட்டதாரி வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/8940

பிறப்பு: 1982 கிறிஸ்தவம்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: AAT, கணக்கியல் உதவியாளர்
எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/8945

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: 66 ½ செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: பட்டதாரி அரச உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச உத்தியோகமுள்ள பெண்
தொ.இ: B/149

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா: 25 ½ செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த.
எதிர்பார்ப்பு: படித்த தகுந்த மணமகன்
தொ.இ: G/1111

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 49 ½ செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: MLT, M.Sc (UK)
எதிர்பார்ப்பு: தகுந்த பட்டதாரி மணமகன்
தொ.இ: G/1114

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 4
கி.பா: 45 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: வெளிவாரிப் பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது தகுந்த மணமகன்
தொ.இ: G/1116

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா: 22 செவ் 3 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS. Doctor (Canada)
எதிர்பார்ப்பு: Accountant, Engineer, Doctor போன்றோர் மணமகன் கனடா செல்ல வேண்டும்
தொ.இ: G/1167

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

எமது சங்கத்தை சீர்குலைக்கும் சதி முயற்சியே இது

(நெளுக்குளம்)

2,650 அங்கத்தவர்களைக் கொண்ட எமது சங்கத்தினை சீர்குலைப்பதற்கு முகம் தெரியாத விரோதிகள் சதி முயற்சிகளை முன்னெடுப்பதாக வவுனியா மாவட்ட முச்சக்கரவண்டிகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் வாடகைக் கார் சேவைக்கு, முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில் அனுமதி வழங்கியமையால் ஏற்பட்டுள்ள முரண்பாடான நிலைமை தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாடகைக்கார் சேவைக்கு நாம் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. எனினும் எமது வாகனத் தரிப்பிடங்களில் கார்களை நிறுத்தி சேவையில் ஈடுபடுவதற்கு நாம் அனுமதிக்க முடியாது.

இந்த செயற்பாடானது அங்கத்தவர்களிடையில் பாரிய முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய விடயமாகவே உள்ளது.

முச்சக்கரவண்டி தரிப்பிடங்கள் இல்லாத இடங்களில் அவர்களிற்கு இடத்தினை ஒதுக்கி கொடுப்பதற்கு நாங்கள் பூரண சம்மதம் தெரிவிக்கின்றோம்.

எமது முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தில் 2,650 அங்கத்தவர்கள் இருக்கின்றனர். அத்துடன் ஒழுக்கமான முறையில் மக்களுக்கு சிறப்பான சேவையை நாம் வழங்கி வருகின்றோம்.

கட்டமைப்பான எமது சங்கத்தினை உடைப்பதற்காக முகம் தெரியாத விரோதிகளால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட சதி செயற்பாடாகவே நாம் இதனை பார்க்கின்றோம்.

நகரில் என்ன தேவை என்றாலும் எம்மையே அழைத்து பேசுகின்றவர்கள் தற்போது எம்மை புறம் தள்ளி முடிவுகளை எடுக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (5-4-299)

கிரவல் ஏற்றிய டிப்பர்களுடன் இரு சாரதிகள் கைது

(குருமன்காடு)

வவுனியா நகரில் அனுமதிப்பத்திரம் இன்றி கிரவல் மண் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனங்களை வவுனியா பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அண்மையில் வவுனியா நகரில் அதிகளவிலான கிரவல் கடத்தல் இடம்பெற்று வரும் நிலையில் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் முகமாக வவுனியா பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.



அதன் போது செட்டிகுளம் நேரியகுளத்தில் இருந்து அனுமதியின்றி கிரவல் மண் ஏற்றிச் சென்ற இரண்டு டிப்பர்கள் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதிகளையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5-250)

ரோந்து நடவடிக்கையில் விசேட அதிரடிப்படையினர்

(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்றுக் காலை முதல் நகர் பகுதி மற்றும் சுற்று வீதிகள், பிரதான வீதிகளில் திடீர் ரோந்து நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபட்டனர்.

நேற்று முற்பகல் 10 மணியிலிருந்து விசேட அதிரடிப் படையினர் வவுனியா நகர் பகுதிகள் மற்றும் பூந்தோட்டம் பகுதிகளிலும் ரோந்தினை மேற்கொண்டதுடன் அதன்போது சந்தேகத்திற்கிடமான வாகனங்களையும் சோதனைக்குட்படுத்தினர். (5-299)

விவசாய பணிப்பாளராக நியமனம்

(மன்னார்)

வவுனியா மாவட்ட மாகாண பிரதி விவசாய பணிப்பாளராக கடமையாற்றிய அ.சகிலாபானு நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி உயர்வுடன் மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய விவசாய அமைச்சின் செயலாளர் மேஜர் ஜென்ரல் குமுது பெரேராவால் இந்நியமனக்கடிதம் வழங்கப்பட்டுள்ளது. (5-4-299)

குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(குருமன்காடு)

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாகக் கண்டெடுக்கப்பட்டவர் உக்கிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் சம்பவத்தினத்தன்று, உக்கிளாங்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் தனிமையில் இருந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-250)



வவுனியாவில் சுகாதாரப்பிரிவினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முதல் வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (படம்:- வசந்தரூபன்)

தேடப்பட்ட நபர் பொலிஸாரால் கைது

(தரும்புரம்)

பளைப் பொலிஸாரால் 2 வருடங்களாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இயக்கச்சிப் பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் 14 வயதுச் சிறுமி ஒருவர் மீது துஷ்பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் இயக்கச்சிப் பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை அன்றைய தினமே கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவிற்கமைய 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.என். குணரத்ன தெரிவித்தார். (5-4-316)

வெண்பிரம்பு தினம் கிளிநொச்சியில்!

(அக்கராயன்)

கிளிநொச்சி லயன்ஸ் கழகம் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்துடன் இணைந்து சர்வதேச வெண் பிரம்பு தினம் கிளிநொச்சியில் நேற்று முன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி லயன்ஸ் கழகத்தின் தலைவர் சு.யதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விழிப்புலனற்றோர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு விருந்துபசாரங்களும் வழங்கப்படன. (5-4-350)

ஹெரோயினுடன் ஒருவர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொலிஸார் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நபர் ஒருவரை சோதனையிட்டனர்.

இதன்போது அவரது உடைமையில் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் இருப்பதை உறுதி செய்து குறித்த நபரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த சம்பவத்தில் அவுசதபிட்டிய பகுதியை சேர்ந்த இளைஞரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள் ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-4- 299)

இராசிபலன்

17.10.2020
ஐப்பசி 01, சனிக்கிழமை
பிரதமை முன்னிரவு 11.41 மணிவரை
சித்திரை பிற்பகல் 2.16 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சந்திராஷ்டமம் உத்திரட்டாதி, ரேவதி
நவராத்திரி விரதாரம்பம்
வளவன்

மேஷம்

பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வருமானம் திருப்தி தரும்.

ரிஷபம்

கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

மிதுனம்

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

கடகம்

தொல்லை கொடுத்தவர்களே தோள் கொடுத்துதவ முன்வரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

சிம்மம்

உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும், உறவு-பகை பாராமல் உதவும் நாள்.

கன்னி

குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

துலாம்

தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, பயணங்களால் பலனுண்டு.

விருச்சிகம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தேவையற்ற சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

மகரம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

கும்பம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள்.

மீனம்

காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, திடீர்ச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

உன்னில் மனிதம் மலரும் போது மகிழ்ச்சியும் மலரும்

டெங்கு நோயாளிகள் அதிகரிப்பு

ஒரு வாரத்திற்கு ஒழிப்பு நடவடிக்கை

இ(கொழும்பு)ந்த வருடத்தில் நாட்டில் இதுவரை 27 ஆயிரத்து 986 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஒரு வாரத்திற்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை 53 பொது சுகாதார சேவை அதிகாரிகள் பிரிவில் மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு தெரிவிக்கையில், நாட்டில் சீரற்ற காலநிலை நிலவுவதால் பல்வேறு பிரதேசங்களிலும் டெங்கு நோய் அதிகரிப்பு காணப்படுகின்றது.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் பல்வேறு இடங்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் அவை டெங்கு நுளம்பு எச்சரிக்கை பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது.

147 சுகாதார பரிசோதகர் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் சூழ் நிலை காரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையென்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 27 ஆயிரத்து 986 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் இது கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் 50 வீதமாக குறைந்துள்ளதை குறிப்பிடமுடியும்.

குறிப்பாக வடக்கு-கிழக்கு உட்பட பல்வேறு பிரதேசங்களிலேயே டெங்கு நோய் அதிகரிப்பு காணப்படுகின்றது என்றும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

கொரோனாவிலிருந்து சுகம்பெற மேர்வின் சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

நாட்டு மக்கள் கொரோனா தொற்றிலிருந்து சுகம்பெற வேண்டும் என தெரிவித்து முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் இந்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

களனி - தலுகம - புலுகஹ சந்தி பிரதேசத்திலுள்ள உத்பல வர்ண ஸ்ரீ ரங்கநாத விஷ்ணு கோவிலில் வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதனைத் தொடர்ந்து அந்த ஆலயத்திற்கு முன்பாக அமர்ந்திருந்தவாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்.

தனக்கு வாக்களித்த களனி பிரதேச மக்கள் உட்பட ஒட்டு மொத்த கம்பஹா மாவட்டத்திலுள்ளவர்களும் அதேபோல நாட்டு மக்களும் கொரோனாத் தொற்றிலிருந்து சுகம்பெற வேண்டும் என்பதே தனது இந்தப் போராட்டத்திற்கான நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)



தேசியப்பட்டியல் வழங்காவிட்டால் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவேன்

மிரட்டும் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

தனக்குரிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படவில்லை என்றால் அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதாக முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் ஜோன் அமரதுங்கவின் பெயரே முதலில் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்த கட்சிக்கு கிடைத்த தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமிக்க கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவை போல் ஜோன் அமரதுங்கவும் கடந்த 1977 ஆம் ஆண்டு முதலில் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டதுடன் 43 ஆண்டுகள் தொடர்ந்தும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடதக்கது. (ஐ-4)

பாராளுமன்றத் தேர்தலில் வாக்கெண்ணல் எவ்வாறு நடைபெறுகிறது?

12

(நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்)

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்-எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

ஆசனங்களைப்பெற்ற கட்சிகளின் வாக்கு வீதம் அட்டவணை -4 இல் காட்டப்பட்டுள்ளது. ஆசன ஒதுக்கீடுகள் அட்டவணை -5 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை -4 -யாழ் தேர்தல் மாவட்டம்
மொத்தவாக்குகளில்5 வீத்த்திற்கு மேல் பெற்ற கட்சிகள்

கட்சிகள்	பெற்ற வாக்குகள்	பெற்ற வாக்குகள் %
தமிழ் தேசிய கூட்டமைப்பு	112,967	31.46%
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி	55,303	15.40%
சிறீலங்கா சுதந்திரக் கட்சி	49,373	13.75%
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி	45,797	12.75%
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி	35,927	10.00%
மொத்தவாக்குகள்	299,367	

அட்டவணை -5 யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
வாக்குகளை ஆசனங்களுக்கு மாற்றுதல்

- யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை 7
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றதால் Bonus ஆசனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சேரும்
- எனவே வாக்கு அடிப்படையில் கட்சிகளுக்கு இடையே பகிரப் படவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை (7 -1)= 6 ஆகும்.
- நடபடி -1
  பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை (Resulting number) =
  299,367 / (7-1) = 299,367/ 6 = 49,895
- நடபடி -2
  பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கையை (Resulting number)
  வைத்து ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

கட்சிகள்	பெற்ற வாக்குகள் / Resulting number	A	மீதி	B
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு	112,967/ 49,895	2	13,177	
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி	55,303/ 49,895	1	5,408	
சிறீலங்கா சுதந்திரக் கட்சி	49,373/ 49,895	0	49,373	1
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி	45,797/49,895	0	45,797	1
தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி	35,927/ 49,895	0	35,927	1
மொத்த வாக்குகள்	299,367			

A- முதற் சுற்றில் ஆசனங்கள் B- இரண்டாம் சுற்றில் ஆசனங்கள்

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிக்கு 1 போனஸ் உட்பட கிடைக்கப்பெறும்

மொத்த ஆசனங்கள் 03 ஆகும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 1 ஆசனம், சிறீலங்கா சுதந்திரக் கட்சி 1 ஆசனம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 1 ஆசனம், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி 1 ஆசனம்.

கேள்வி 26:- வன்னி மாவட்டத்தில் 11,310 வாக்குகளைப் பெற்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு எவ்வாறு ஆசனம் கிடைத்தது?

அட்டவணை -6 - வன்னி தேர்தல் மாவட்டம்
மொத்த வாக்குகளில் 5 வீதத்திற்கு மேல் பெற்ற கட்சிகள்

கட்சிகள்	பெற்ற வாக்குகள்	பெற்ற வாக்குகள் %
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு	69,916	33.64%
சிறீலங்கா பொதுஜன பெரமுன	42,524	20.48%
சமகி ஜன பலவேகய	37,883	18.23%
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி	11,310	5.44%
மொத்த வாக்குகள்	161,633	

அட்டவணை -7 வன்னி தேர்தல் மாவட்டம்
வாக்குகளை ஆசனங்களுக்கு மாற்றுதல்

- வன்னி தேர்தல் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை 6
- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றதால் Bonus ஆசனம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சேரும்
- எனவே வாக்கு அடிப்படையில் கட்சிகளுக்கு இடையே பகிரப் படவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை (6 -1)= 5 ஆகும்.
- நடபடி -1
  பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை (Resulting number) =
  161,633 / (6-1) = 161,633 / 5 = 33,327
- நடபடி -2
  பூர்த்தி செய்யவேண்டிய வாக்குகளின் எண்ணிக்கையை (Resulting number)
  வைத்து ஒவ்வொரு கட்சிக்கும் கிடைக்கவேண்டிய ஆசனங்களின் எண்ணிக்கை பின்வருமாறு தீர்மானிக்கப்படும்

கட்சிகள்	பெற்ற வாக்குகள் / Resulting number	A	மீதி	B
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு	69,916/ 33,327	2	3,262	
சிறீலங்கா பொதுஜன பெரமுன	42,524/ 33,327	1	9,197	
சமகி ஜன பலவேகய	37,883/ 33,327	1	4,556	
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி	11,310/33,327	0	11,310	1
மொத்த வாக்குகள்	161,633			

A- முதற் சுற்றில் ஆசனங்கள் B- இரண்டாம் சுற்றில் ஆசனங்கள்

இதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிக்கு 1 போனஸ் உட்பட கிடைக்கப்பெறும்

மொத்த ஆசனங்கள் 03 ஆகும். சிறீலங்கா பொதுஜன பெரமுன 1 ஆசனம், சமகி ஜன பலவேகய 1 ஆசனம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 1 ஆசனம்.

பதில்:- வன்னி மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி **5.44%** வாக்குகளைப் பெற்றிருந்தது. அதனால் முதலில் அக்கட்சி ஆசனத்தைப்பெற தகுதி பெற்றது.

அக்கட்சி அடுத்ததாக வந்த தமிழரின் ஜனநாயக சோசலிச முன்னணி **4.84%** வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனால் அக்கட்சி **5%** குறைந்த வாக்குகளைப் பெற்றதால் ஆசனத்தைப்பெற தகுதி பெறவில்லை.

அதன் பின் கட்சிகளுக்கு ஆசனங்களை ஒதுக்கும் போது இரண்டாம் சுற்றில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைத்தது. அதனை அட்டவணைகள் 6 மற்றும் 7 மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

கேள்வி 27:- விருப்புவாக்குகள் எவ்வாறு எண்ணப்படுகின்றன?

பதில்-கட்சிரீதியாக ஒவ்வொரு வேட்பாளர்களும் பெற்றுள்ள விருப்புக்களை எண்ணல் மூன்றாம் கட்டத்தில் மேற்கொள்ளப்படும். (தொடரும்)

சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–216

உணவுப் பற்றாக்குறையை தவிர்க்க வீட்டிலொரு தோட்டம் அவசியம்

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

வருமுன் செயற்படுவோம்! இடர்காலங்களில் நாம் முன் கூட்டியே பலவகையான செயற்பாடுகளை திட்டமிட்டு செய்வது அவ்விடர்களிலிருந்து விடுபட உதவும். அந்த வகையில் மகுடநுண்ணுயிரி (கொரோனா-19) இனது இரண்டாவது அலை பல இடங்களில் பரவலாகத் தொற்றுவதாக வருகின்ற தகவலை அடிப்படையாக வைத்து நாம் எம்மை தயார்படுத்திக் கொள்வது அவ்வாறான இடர்களிலிருந்து விடுபட மிகவும் உதவியாக இருக்கும். கொரோனாத் தொற்றுக்குக் குடும்பத்தில் ஒரு உறுப்பினர் உள்ளாக்கப்பட்டால் முழு குடும்பத்தையும் தனிமைப்படுத்தல்களில்வைக்க வேண்டியிருக்கும். அந்தக் காலங்களில் உணவினை வெளியிலிருந்து பெறுவது உகந்ததல்ல.

மாறாக நாமே தயாரித்து உணவாக்க வேண்டியிருக்கும். இவ்வாறான காலங்களில் ஒவ்வொருவரும் தத்தமது வீடுகளில் சிறிய வீட்டுத் தோட்டத்தை அமைத்திருந்தால் அன்றாடம் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களை வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்றே தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். நோய்த்தொற்றானவர்களை தீண்டத்தகாதவர்களாக நாம் மனதளவில் உணர்வதிலிருந்து விடுபட வேண்டும்.

அவர்களும் மனிதர்களே. நோய்த்தொற்று உடையவர் என அடையாளம் காணப்பட்டால் அல்லது நோயின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தால் உடனடியாக வைத்தியருக்கு அறிவித்து அதற்கான ஆலோசனைகளையும்பெற்றுக்கொள்வது அவசியமானதாகும்.

கடந்த 14.10.2020 அன்று உலக உணவு பரிசின் **(World Food Prize)** பக்க செயலமர்வாக அமெரிக்காவிலுள்ள மெச்சிக்கன் மாநில பல்கலைக்கழகத்தினால் **(Michigan State University)** ஒழுங்கு செய்யப்பட்ட உணவுப்பாதுகாப்பு தொடர்பான இணையவழி கருத்தமர்வில் பல்வேறு நாடுகளிலுள்ள வீட்டுத்தோட்ட திட்டங்கள் பற்றி கலந்து கொண்ட வளவாளர்களினால் விளக்கப்பட்டது.

எமது நாட்டிலும் வடமாகாணத்தில் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் **(National Science Foundation)** அனுசரணையுடன் செய்யப்பட்ட ஆய்வின் பெறுபேறுகள் தகவல்களுடன் முன்வைக்கப்பட்டன.

இதன் விளைவாக பலரும் வீட்டுத்தோட்ட பயனாளிகளாக முன்வருவதனை அவதானிக்க முடிந்தது. பல்வேறு பட்ட தொழில் செய்பவர்கள் குறிப்பாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கியலாளர்கள், ஆசிரியர்கள், சாரதிகள், எனப் பலதரப்பட்ட மக்களும் தமக்கான உணவை உற்பத்தி செய்வதற்காக விவசாயத் திணைக்களத்தினதும் கமத்தொழில் சேவை நிலையத்தினதும் உதவி பெற்று வீட்டுத்தோட்டமொன்றை தமது வீடுகளில் உருவாக்குவதனை காண முடிகின்றது. இது ஒரு விரும்பத்தக்க முக்கியமான மாற்றமாக தற்போதைய கொரோனா காலத்தில் கருதப்படுகின்றது.

வீட்டுத்தோட்டமொன்றை அமைப்பதில் பல விடயங்களை கருத்தில் கொள்ளலாம். அவர வர் விருப்புக்கிணங்க அதில் வளர்க்கப்படும் தாவரங்களையும் தீர்மானித்துக் கொள்ளலாம்.

வீட்டின் இடவசதியைக் கணக்கிலெடுப்பின் அதனை அடிப்படையாக வைத்து அதில் வளர்க்கப்போகின்ற தாவரங்களை குறிப்பாக ஆண்டுப்பயிர்கள், கொடிகள் மற்றும் பல்லாண்டுப் பயிர்களான மரங்கள் என்பனவற்றை தீர்மானிக்கலாம்.

வீட்டுத்தோட்டமொன்று நீண்டகாலத்திற்கு தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டுமாயின் அதில் அவசியமாக பல்பயன்தரும் மரங்களை உள்வாங்க வேண்டும். தற்போது மரங்களை சிறுமரங்களாக வளர்க்கின்ற தொழில்நுட்பம் அனைவருக்கும் பழக்கமானதாக மாறவேண்டும்.

இவ்வாறான தாவரங்களை தெரிந்தெடுத்து வீட்டுத் தோட்டதினுள் புகுத்த வேண்டும். வருமுன் காப்போம் என்பதற்கிணங்க அனைவரும் சேர்ந்து நடைமுறைப்படுத்தினால் மகுட நுண்ணுயிரியின் பாதிப்பிலிருந்து அனைவருக்கும் விடுதலை கிடைக்க வாய்ப்புண்டு.

வீட்டுத்தோட்டத்தில் நடுகை செய்யக்கூடிய பல்லாண்டும் பயிர்களாக தென்னை, மா, கமுகு, நெல்லி (பெருநெல்லி மற்றும் சிறுநெல்லி, தேசி, கொய்யா, அன்னமுன்னா, பலா, ஜம்பு)என்பனவற்றை கவனத்தில் கொள்ளலாம்.

பப்பாசியையும் தேவைக்கேற்ப நடுகை செய்து கொள்ளலாம். இவற்றுக்கான இடைவெளிகளை விட்டு நடுகை செய்வது மிகவும் அவசியமானதாகும். பயிர்களுக்கான இடைவெளியை நெல்லுக்கு நண்டோட, வாழைக்கு வண்டிலோட, தென்னைக்கு தேரோட என சொல்லியிருந்தாலும் வீட்டுத்தோட்டத்தின் அளவுக்கேற்பவும் அங்குள்ள நிலப்பரப்பின் விஸ்தீரணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பயிர்களுக்கான இடைவெளி என்பனவற்றை கவனித்து வீட்டுத்தோட்டத்தை உருவாக்கலாம்.

இவற்றுடன் சேர்ந்த கொடிகள், செடிகள் மற்றும் பூண்டுகளை தேவைக்கேற்ப நடுகை செய்து கொள்ளலாம். ஆண்டுப்பயிர்களான மரக்கறிப் பயிர்கள் மற்றும் வேறு செடி கொடிகளையும் வளர்க்க முடியும். இவற்றுக்கான கொள்கலன்களில் பயிர்களை வளர்க்க முடியும்.

கொள்கலன் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கும் அதே நேரத்தில் நாம் பயிரிடும் பயிர்களிலிருந்து அதியுச்ச பயனை எதிர்பார்க்க வேண்டும்.

செடிகொடிகளாக வெற்றிலை, மிளகு மற்றும் மூலிகைத் தாவரங்களை அதிகம் உள்வாங்கிக் கொள்ளலாம். மரக்கறிப் பயிர்களுடன் நாளுக்கு ஒன்றாக உணவாக்கிக் கொள்ளும் இலைக் கறிவகைகளையும் பயிரிட்டுக் கொள்வது மிகவும் சிறந்தது. உயிர்வேலிப் பயிர்களான அகத்தி, முருங்கை என்பனவற்றுடன் சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, பசளி, இலைக்கோவா, புதினா, கறிவேப்பிலை என்பனவற்றை வளர்த்துக் கொள்ள முடியும். இப்பயிர்களை வளர்த்து அப்படியே விட்டுவிடாமல் அவற்றிலிருந்து இலையை அறுவடை செய்யும் போது மரத்தையோ அல்லது செடியையோ நாம் தேவையானளவிற்கு கத்தரித்துக் கொள்ள முடியும்.

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடும் பயிர்களுக்கு சேதன உரத்தையே பயன்படுத்துவதனால் அதில் பெறும் உணவுப்பொருட்கள் இரசாயனமற்ற சேதன உணவாக பெறும் அரிய வாய்ப்பு எமக்கு கிடைக்கின்றது. எமது தேகாரோக்கியத்தை பேணிப் பாதுகாப்பதுடன் எமது உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுப்பொருட்களுக்கும் முன்னுரிமை கொடுக்கலாம்.

இவை தவிர இஞ்சி, மஞ்சள், வத்தாளை, இராசவள்ளி, கருணை, மோதகவள்ளி என்பனவற்றையும் வளர்க்கலாம். கொள்கலனுக்குள் வளர்க்கக் கூடிய இஞ்சி மற்றும் மஞ்சள் போன்றவற்றை தவிர்த்து மற்றைய கிழங்குப் பயிர்களை நிலத்தில் ஆழமாகக் கொத்தி சாறிவிட்டு வளர்ப்பது அவற்றின் கிழங்கு மண்ணினுள் வளர வழி கிடைக்கும்.

வீடு ஒன்றின் தேவையை இயன்றளவிற்கு பூர்த்தி செய்வதற்குரிய பயிர்களை பயிரிட்டு அதிலிருந்து காய்களையும் பழங்களையும் பெறுவது இலகுவாக இருக்கும்.

வீட்டுத் தோட்டமொன்றில் நடுகை செய்யும் பயிர்களுக்கான நீர்த்தேவையை மட்டுப்படுத்துவதற்கான அரிய பல தொழில்நுட்பங்கள் நடைமுறையிலுண்டு.

வீட்டில் உருவாகும் சேதனக் கழிவுகளை தெருவில் விட்டெறியாமல் வீட்டினுள்ளேயே அதனை மீள் சுழற்சி செய்து மண்புழு உரமாக, மண்புழு திரவமாக இன்னும் மண்புழு உர தேநீராக பயன்படுத்த முடியும். இதன் மூலம் மண்புழுவின் பயன் பாட்டினை அதிகளவில் பயன்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ஒவ்வொரு வீட்டிலுமுள்ள சிறிய தோட்டத்தில் எமக்கு விரும்பிய பயிர்களை வளர்க்க வழியுண்டு. நாமாக உணவுற்பத்தியினுள் இறங்கிவிட்டால் எந்த இடர் வந்தாலும் எமது உணவுக்கு எந்தப்பங்கமும் வராது.

அனைத்து அவசியமான உணவுகளை உற்பத்தி செய்யக்கூடியதாக இருந்தால் கிட்டத்தட்ட 50-60 சதவீதமான உணவினை எமது வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

அன்றாடம் இவ்வகை உற்பத்திகளை உணவாக்கிக் கொண்டுவர எமக்கு தேவையான எதிர்ப்பு சக்தியை நாமே கூட்டிக்கொள்ளலாம். ஒரு பொழுதுபோக்காக பயிர்களை சிறியளவில் எமது வீட்டுத் தோட்டத்தில் உற்பத்தி செய்ய வழியிருக்கும் போது அதனை நாம் அனைவரும் கவனத்திலெடுத்து எமக்கான உணவின் தேவையை நிறைவு செய்யலாம்.

பழப்பயிர்களை தெரிவு செய்து பயிர் செய்யலாம். இடமிருந்தால் புளி, விளாம்பழம், நாவல் என மரங்களையும் நடுகை செய்யலாம்.

வீட்டுத்தோட்டத்திலொரு தேக்க மரம் நடவேண்டும். அதனது இலை வேறு தேவைகளுக்கு பயன்படுவது போல மண்புழு வளர்ப்பிற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். தேக்கமிலையில் மண்புழு நன்றாக வளரும்.

வீட்டில் உருவாகும் சேதனக் கழிவுகளை மீள் சுழற்சி செய்து அதனை வளர்க்கும் பயிர்களுக்கு உரமாக இடும் போது வீடும் நாடும் சுத்தமாவதற்கு மேலாக சேதன முறையில் பயிர்களை உற்பத்தி செய்து உணவாக உட்கொள்ள வாய்ப்புக்கிட்டும்.

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 229



பாரதம்

இந்தியாவில் தொற்று எண்ணிக்கை 74 இலட்சமாக உயர்வு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை 74 இலட்சத்தை எட்டியுள்ளது.நேற்று வெள்ளிக் கிழமை காலை வரையான கடந்த 24 மணி நேரங்களில் மட்டும் 63 ஆயிரத்து 371 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ள தாக இந்திய மத்திய சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, கடந்த 24 மணி நேரங்களில் 895 பேர் உயிரிழந்த நிலையில் மொத்த கொரோனா மரணங்கள் ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 161 ஆக உயர்ந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அமெரிக்கா வில் தொற்று நோயாளர் தொகை 80 இலட்சத்தை எட்டியுள்ள நிலையில் அமெரிக்காவுக்கு அடுத்து உலகில் அதிக தொற்று நோயாளர்களைக் கொண்ட நாடாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. (நி)

தொற்றினால் பாதிப்படைந்த நாடுகளில் நான்காவது நாடாக ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யாவில் நாளொன்றுக்கான அதிகபட்ச கொரோனா வைரஸ் பெருந்தொற்று உயிரிழப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் ரஷ்யாவில் 13ஆயிரத்து 754பேர் வைரஸ் தொற்றினால் பாதிப்படைந்ததோடு, 286பேர் உயிரிழந்துள்ளதாக, ரஷ்யாவின் கொரோனா வைரஸ் நெருக்கடியை கண்காணிக்கும் மையம் தெரிவித்துள்ளது. ரஷ்யாவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச உயிரிழப்பு எண்ணிக்கை இதுவாகும்.கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நான்காவது நாடாக விளங்கும் ரஷ்யாவில், இதுவரை மொத்தமாக 13இலட்சத்து 54ஆயிரத்து 163பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 23ஆயிரத்து 491பேர் உயிரிழந்துள்ளனர். (நி)

மலேசியாவில் தொற்று அதிகரிப்பு தேர்தல் நடத்துவதில் சிக்கல்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் கொரோனாத் தொற்று பாதிப்பு அதிகரித்து வருகின்ற சூழலில் பொதுத் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது என்று மலேசிய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள நிலையில் அந்நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் அன்வார் இப்ராகிம் மலேசியாவின் மன்னரை சந்தித்து அடுத்த பிரதமராக பொறுப்பேற்க தமக்கு போதுமான நாடாளுமன்ற உறுப்பினர் களின் ஆதரவு இருப்பதாக தெரிவித்துள்ளார்.இந்நிலையில் ஆளும் தரப்பில் உள்ள கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு மலே சிய மன்னரின் அரண்மனை அழைப்பு விடுத்துள்ளதால் மலேசிய அரசியல் களத்தில் பரபரப்பும் புதிய எதிர்பார்ப்புக்களும் நிலவுகின்றன. நாடாளு மன்றத்தில் யாருக்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு உண்டு என்பதை மன்னர் கட்சி தலைவர்களின் சந்திப்புக்களில் இறுதியில் முடிவு எடுத்து தெரிவிக்கும் வரை மலேசிய அரசியல் களத்தில் பரபரப்பு தொடரும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (நி-10)

உலகில் அதிகமான க
இந்தியா,சீனா,ரஷ்

ட்ரம்ப் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

உலகில் அதிகமான காற்று மாசு ஏற்படு வதற்கு இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் நச்சு வாயுக்களை அதிகமாக வெளியிடுவதே காரணம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டினார்.

தடுப்பு மருந்து குறித்த தகவல்களை திருட பயங்கரவாதிகள் முயற்சி

உளவு நிறுவனம் எச்சரிக்கை

(லண்டன்)

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து தொடர்பான ஆய்வுத் தகவல்களைத் திரு டவோ அல்லது அவற்றைச் சீரழிக்கவோ சில பயங்கரவாத அமைப்புகள் திட்டமிட்டு வருவதாக பிரிட்டன் உளவு நிறுவன மான எம்.ஐ.-5 (MI-5) எச்சரித்துள்ளது.

உலகளவில் புகழ்பெற்ற உளவு நிறு வனமான எம்.ஐ.-5 சர்வதேச பயங்கர வாதத்திற்கு எதிராகச் செயற்பட்டு பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் தடுப்பு மருந்துகள் தொடர்பான தகவல்களைத் திருட பயங் கரவாத அமைப்புகள் சில திட்டமிட்டு வருவதாக எம்.ஐ.-5 உளவு அமைப்பின் தலைமை அதிகாரி கென் மெக்கல்லம் எச்சரித் துள்ளார்.

ரஷ்யா, சீனா, ஈரான் உள்ளிட்ட நாடுகளில் உள்ள வலதுசாரி பயங்கரவாதிகள் உள்ளிட்ட சில பயங்கரவாதிகள் பிரிட்டனின் தடுப்பு மருந்துகள் குறித்த தகவல்களைத் திருட முயற்சி மேற்கொண்டு வருவதாக மெக்கலம் தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக் கைப்படி தற்போதுவரை உலக நாடுகள் பலவற்றில் 150-க்கும் அதிகமான தடுப்பு மருந்து சோதனைகள் நடைபெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. (நி)

தாய்லாந்து பிரதமர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் வலியுறுத்தியும் அந் நாட்டில் இடம்பெற்றுவரும் மக்கள் போரா ட்டம் நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. எனினும் அவசர நிலை அ ஈடுபட்டுள்ளனர்.

வெளிநாடு

காற்று மாசு ஏற்பட ஷியாதான் காரணம்



வட கரோலினாவில் நேற்று முன்தினம் நடந்த தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் பங்கேற்றார். அப்போது அவர் பேசுகையில், உலகில் காற்று மாசு ஏற்படுவதற்கு இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தான் பெரும்பாலும் காரணம் என்று குற்றம் சாட்டினார்.

ஆனால், உண்மையில் பாரிஸ் பருவ நிலை மாறுபாடு ஒப்பந்தத்தில் இருந்து கடந்த 2017ஆம் ஆண்டு அமெரிக்கா வெளியேறியது. அமெரிக்கா அளிக்கும் கோடிக்கணக்கான டொலர் பணம் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கே வழங்கப்படுகின்றன.

இந்த ஒப்பந்தத்தால் அமெரிக்காவில் கோடிக்கணக்கான வேலைவாய்ப்புகள் பறிக்கப்படுகின்றன. கச்சா எண்ணெய், எரிவாயு, நிலக்கரி, உற்பத்தித் துறையும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் அமெரிக்காவுக்கு விரோதமானது எனக்கூறி அப்போது வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (நி)

ஆடை வடிவமைப்பிற்கான ஒஸ்கார் விருது வென்ற அதையா காலமானார்

(டில்லி)

இந்தியாவில் இருந்து முதல் முதலாக ஒஸ்கார் விருது வாங்கிய ஆடை வடிவமைப்பாளரான பானு அதையா தனது 91 வயதில் உயிரிழந்துள்ளார். 1983 ஆம் ஆண்டு வெளியான காந்தி படத்திற்கு சிறந்த முறையில் ஆடை களை வடிவமைத்ததற்காக பானு அதையாவுக்கு ஒஸ்கார் விருது கிடைத்தது.

2012 ஆம் ஆண்டில் மூளைக் கட்டி இருப்பது கண்டறியப்பட்ட பின்னர் அவர் சமீபத்திய ஆண்டுகளில் உடல்நலம் சரியில்லாமல் படுக்கையிலே இருந்தார். இந்நிலையிலேயே பானு அதையா நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

ஏறக்குறைய ஐந்து தசாப்தங் களாக நீடித்த ஒரு வாழ்க்கையில் சிறந்த திரைப்பட தயாரிப்பாளர் களுக்கான ஆடைகளை வடிவமைப்பதில் அதையா புகழ் பெற்று இருந்தார். இந்திய சுதந்திரத் தலைவரைப் பற்றிய படத்தில் பணியாற்ற பிரிட்டிஷ் திரைப்படத் தயாரிப்பாளர் ரிச்சர்ட் அட்டன் பரோவின் அழைப்பு அவரை உலகளாவிய முக்கியத்துவத்திற்கு அழைத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

யும் போரா ட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் களை விடுவிக்க
ட்டம் தீவிரமடைந்துள்ள நிலையில் தலைநகர் பாங்கொக்கில் அவசர
அறிவிப் பையும் மீறி ஆயிரக்கணக்கானவர்கள் போராட்டத்தில்

அமெரிக்காவில் 80 இலட்சத்தைக் கடந்தது தொற்றாளர் எண்ணிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உறுதிப்படுத் தப்பட்டவர்களின் எண்ணிக்கை 80 இலட்சத்தைக் கடந்துள்ளது.கடந்த ஒரு மாதத்தில் மட்டும் நாட்டில் சுமார் 10 இலட்சம் பேர் கொரோனா தொற் றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, தொற்று நோயின் ஆரம்பத்தில் இருந்து அமெரிக்காவில் கொரோனாவால் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கையும் 2 இலட்சத்து 17 ஆயிரத்திற்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளது. அமெரிக்கா முழுவதும் நேற்று முன்தினம் வியாழக் கிழமை 56 ஆயிரம் புதிய தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். குளிர் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் தொற்று நோய் மேலும் வேகமாகப் பரவும் சூழல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

பிரான்ஸில் அசுர வேகத்தில் பரவும் கொரோனா

(பாரிஸ்)

பிரான்ஸில் கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை ஆரம்பித்துள்ள நிலையில், ஒரேநாளில் 30ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.நேற்று முன்தினம் மட்டும் பிரான்ஸில் வைரஸ் தொற்றினால், 30ஆயிரத்து 621பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 88பேர் உயிரிழந்தனர்.உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 10ஆவது நாடாக விளங்கும் பிரான்ஸில் இதுவரை மொத்த மாக எட்டு இலட்சத்து ஒன்பதாயிரத்து 684 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், 33 ஆயிரத்து 125பேர் உயிரிழந்துள்ளனர். (நி)

இஸ்ரேலில் கொரோனா தொற்று மூன்று இலட்சத்தைத் தாண்டியது



(ஜெருசலேம்)

இஸ்ரேலில் கொரோனா வைரஸ் பெருந்தொற்றினால், மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.அண்மைய உத்தி யோக பூர்வ புள்ளிவிபரங்களின் படி, இஸ்ரேலில் மூன்று இலட்சத்து 201பேர் வைரஸ் தொற்றினால் மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 24ஆவது நாடாக விளங்கும் இஸ்ரேலில் இதுவரை கொவிட்-19 தொற்றினால், மொத்தமாக இரண்டாயிரத்து 127பேர் உயிரிழந்துள்ளனர்.நேற்று முன்தினம் மட்டும் மொத்தமாக ஆயிரத்து 701பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டனர். 29பேர் உயிரிழந்தனர்.தற்போதுவரை 40ஆயிரத்து 848பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட நிலையில், அங்குள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 742பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. (நி)

ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் இலங்கைக்கு வழங்கியது அமெரிக்கா

(கொழும்பு)

கொரோனா பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் அடங்கிய ஒரு தொகுதி பொதிகளை இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியிடம் அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் இதனைக் கையளித்துள்ளார்.

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இலங்கைக்கு குறித்த பாதுகாப்பு அங்கிகளின் பயன்பாடு மிகவும் முக்கியமானதாகக் காணப்படும் என அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் தனது பங்களிப்பினை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-7)

காணி அபகரிப்பை ஒருபோதும் ஏற்கேன்

(கொழும்பு)

எதிர்காலத்தில் நாட்டில் காணி அபகரிப்புக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வாறான சட்டவிரோதச் செயல்களுக்கு வாய்ப்பு உள்ள தொல்பொருள் முக்கியத்துவம் மிக்க இடங்கள் தொடர்பில் மாவட்ட செயலாளர்கள் , அரசாங்க அதிபர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதேபோல், நில விவகாரத்தில், தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என, பாதுகாப்பு செயலர் வலியுறுத்தினார்.

எமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பொய்யான பரப்புரைகளை பொருட்படுத்தாமல் நாட்டின் முன்னேற்றத்திற்காக எமது பணிகளை நாம் தொடர்ந்து

முன்னெடுத்து செல்லவுள்ளோம் என நாரஹென்பிட்டியவில் உள்ள உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள், அரசாங்க அதிபர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் தொடர்பாக கருத்துவெளியிட்ட பாதுகாப்பு செயலாளர், கம்பஹா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவும் நிலைமை தொடர்பாக எனது கவனத்திற்கு கொண்டு வந்ததன் விளைவாக, உரிய அதிகாரிகளுடன் எங்களால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக ஒருங்கிணைக்க முடிந்தது என தெரிவித்தார்.

பாதுகாப்பு படைகள், சுகாதாரத் திணைக்களம் மற்றும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் நாட்டில் காணப்பட்ட முன்னைய கொரோனா வைரஸை எம்மால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-7)

மீன் வியாபாரிக்கு கொரோனா 80 பேர் தனிமைப்படுத்தலில்

(கம்பஹா)

நடமாடும் மீன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வியாபாரி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவருடன் தொடர்புபட்ட அடிப்படையில் முதல்கட்டமாக சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டம் கிரிந்திவெல குட்டிகல பிரதேசத்தில் மீன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீன் வியாபாரி ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மீன் வியாபாரியுடன் நெருங்கிப் பழகிய சுமார் 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தொம்பே பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

குறித்த மீன் வியாபாரி குட்டிகல, ரந்தாவான, மெத்தேகம, போகஹகும்புர, கிரிந்திவெல மற்றும் பெபிலிவெல ஆகிய பிரதேசங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-7)

இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

நிம்மதி எங்கே?

அந்தக் காலத்திலே ஒரு ஞானி இருந்தார். அவர் பேர் டயோஜனிஸ். ஆற்றங்கரை மணலிலே சும்மா படுத்திருந்தார். அலெக்சாண்டர் இந்தியாவுக்குப் புறப்பட்ட பொழுது அவரைப் போய்ப் பார்த்தார்.

ஞானி அவரைப் பார்த்து நீ எங்கே போகின்றாய்? எதற்காகப் போகின்றாய்? என்று கேட்டார்.

நான் ஆசியா மைனரை வெல்லப் போகின்றேன் என்றார் இவர்.

அதன் பின்பு என்ன செய்யப் போகின்றாய் என்றார். இந்தியாவை வெல்வேன் என்றார். அதன்பின்பு என்று கேட்டார் அந்த ஞானி.

உலகத்தையே வெல்வேன் என்றார் அலெக்சாண்டர்.

உலகம் முழுவதும் ஜெயித்ததன் பின்பு என்ன செய்யப் போகின்றாய் என்று அவர் மறுபடியும் கேட்டார். "அதற்குப் பின்பு நான் நிம்மதியாக ஓய்வெடுப்பேன்" என்றார் அலெக்சாண்டர்.

இந்தப் பதிலைக் கேட்டதும் ஆற்று மணலிலே படுத்திருந்த அந்த ஞானி சத்தம் போட்டுச் சிரித்தார்.

கொஞ்ச தூரத்திலே படுத்திருந்த தன்னுடைய நாயைக் கூப்பிட்டார். அது அவர் பக்கத்திலே வந்து நின்றது. ஞானி அந்த நாயிடம் சொன்னார்.

பார்த்தாயா... இவர் சொல்வதை? உலகத்தை யெல்லாம் ஜெயித்ததன் பின்பு இந்த மனிதர் ஓய்வு எடுக்கப் போகின்றாராம். ஆனால் நாம் இரண்டு பேரும் இங்கே ஒரு சின்ன இடத்தைக் கூட ஜெயிக்காமல் நிம்மதியாக ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்றார்.

நாயிடம் இப்படி சொல்லிவிட்டு அதன்பின்பு அலெக்சாண்டரைப் பார்த்து சொன்னார்.

"இதோ பாருப்பா... ஓய்வு தான் உன்னுடைய கடைசி இலட்சியம் என்றால் இந்த அழகான ஆற்றங்கரையிலே எங்களுடன் நீ இப்பொழுது சேர்ந்து கொள்ளலாமே. கடைசியிலே ஓய்வு எடுப்பதற்காக வேண்டி ஏன் உலகம் பூராக துன்பத்தையும் துயரத்தையும் உண்டாக்க வேண்டும்? இப்பொழுதே இங்கேயே நீ ஓய்வு எடுக்கலாமே என்றார் இதைக் கேட்டதும் அலெக்சாண்டர் ஒரு மாதிரியா ஆகிவிட்டார்.

நீங்கள் சொல்வது அறிவு பூர்வமாகத் தான் இருக்கின்றது. ஆனால் நான் இப்பொழுது ஓய்வு எடுக்க முடியாது... முதலிலே உலகத்தை ஜெயித்துவிட்டு வருகின்றேன்.. என்றார்.

உலகத்தை ஜெயிப்பதற்கும் ஓய்வு எடுப்பதற்கும் சம்பந்தம் எதுவும் இருக்கிறதாகத் தெரியவில்லையே என்றார் அவர்.

நீங்கள் வெல்வது நியாயம் தான்.. ஆனாலும் நான் ஏற்கனவே புறப்பட்டாச்சு... பாதியிலே பின் வாங்க வழியில்லை.. என்றார்.

ஞானி சொன்னார். நீ பாதி வழியிலே திரும்பத்தான் போகின்றாய். ஏன் என்றால் பயணம் முடிந்த பிறகு யார் தான் இதுவரைத் திரும்பி வந்திருக்கின்றார்கள்..? என்றார்.

ஞானி சொன்ன தீர்க்க தரிசனம் தான் பலித்தது.

நாடு திரும்பும்போது பாதி வழியிலேயே அலெக்சாண்டர் இறந்து போனார். இந்த நிகழ்ச்சியை சொல்கின்ற ஒரு வெளியவர் வாழ்வின் உண்மைகளை விளக்குகின்றார். எல்லா அலெக்சாண்டர்களுமே செத்துத் தான் போகின்றார் பாதி வழியிலே என்றார் அவர். அவர்கள் செல்வங்களைச் சேர்க்கிறார்கள். ஆனால் அதை அனுபவிக்க அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. அப்படிப்பட்டவர்கள்.. எல்லா இசைக் கருவிகளையும் சேகரித்து விடுகின்றார்கள். சரியான தருணத்திலே அதையெல்லாம் வாசிக்கின்ற சக்தியை அவர்கள் இழந்துவிடுகின்றார்கள். கடைசியில் வெறுங் கையுடன் ஒன்றும் செய்ய முடியாமல் அவர்கள் எல்லாம் அழ ஆரம்பித்து விடுகின்றார்கள். இன்றைக்குப் பலபேர் வாழ்க்கையிலே இது தான் நடந்து கொண்டிருக்கின்றது.

கைக்கு எட்டிய தூரத்திலே இருக்கின்ற நிம்மதியைத்தேடி கழுத்தைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றோம். அப்படி வந்து சேருவதற்குள்ளே நிம்மதி காணாமல் போய்விடுகின்றது. இந்தக் காலத்திலே ஒருத்தர்... ஒரு நாள் நடு இராத்திரி.. ஒரு வீதி வழியாக வந்து கொண்டிருந்தார். வழியிலே ஒருத்தர். அவரைப் பார்த்தார். யார் நீங்கள்? இந்த ராத்திரி வேளையிலே எங்கே இப்படி போகின்றீர்கள்? என்று கேட்டார்.

வாழ்க்கையிலே என்னுடன் வாங்க.. இங்கேயிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்திலே ஒரு ஆச்சிரமம் இருக்கின்றது. அங்கே ஒரு சாமியார் இருக்கின்றார். அவரிடம் போனால் நமக்கு நிம்மதி கிடைக்கும் என்றார் இவர். இதற்கு அவர் சொன்னார். நன்றாக பாருப்பா நான் தான் அந்த சாமியார்.. அங்கேயும் இப்பொழுது நிம்மதி இல்லை... வொலிஸ் விசாரணை ஆரம்பமாகிவிட்டது... அது தான் புறப்பட்டுவிட்டேன்.. என்றார்.

நவராத்திரி விழா இன்று ஆரம்பம்

நவராத்திரி பெண்கள் விரும்பிச் செய்யும் ஒரு தெய்வீக பெருவிழா. நவராத்திரி நாட்களில் வீட்டை அலங்கரித்து, கொலு அமைத்து வீட்டிற்க்கு வரும் சுமங்கலிப் பெண்களையும் கன்னிப் பெண்களையும் அழைத்து அவர்களுக்கு தாம்பூலம் கொடுத்து நிகழ்ச்சிக்கு வந்த விருந்தினர்களை மரியாதை செய்து அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தி இதனால் அந்த இல்லத்தில் முப்பெரும் தேவிகளின் ஆசியை பரிபூரணமாக பெறும் நன்னாள் இது.

இப்படி நன்மை தரும் நவராத்திரியை எப்படிக் கொண்டாடுவது? அதன் மகிமை என்ன? என்பதை நாம் இப்போதே தெரிந்து கொள்ள இருக்கிறோம்.

நவராத்திரி உருவான கதை

ரம்பன் என்பவனுக்கும் எருமை உருவம் கொண்ட அரக்கிக்கும் பிறந்தவன் தான் மகிஷன். அதனால் தான் மனித உடலும் எருமைத் தலையுனும் தோன்றினான் மகிஷன், பிரம்மனை நினைத்து மேரும லையில் 16 ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து ''தனக்கு யாராலும் மரணம் நேரக் கூடாது, அப்படியே நேர்ந்தால் அது பெண்னால் தான் என்ற வரத்



தைப் பெற்றான்.

பெண்கள் பூப்போல் இருப்பதால் அவர்களால் இரும்பை விட வலிமையர்ன தன்மை கொன்று விட முடியாது என்று மகிஷன் நினைத்ததால் இப்படி ஒரு வரத்தைப் பெற்றான்.

நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கும் என்று சொல்வார்களே, அது மகிஷனுக்கு பொருத்தமாகி விட்டது. தேவ லோகத்தையே கைப்பற்ற நினைத்தான். இதனால் தேவர்கள் பயந்து மகாவிஷ்ணுவிடம் உதவி கேட்டார்கள். மகாவிஷ்ணு தேவர்களுக்காக உதவி செய்ய மகிஷனிடம் போருக்குச் சென்றார்.

ஆனால் மகிஷனை விஷ்ணு பகவானால் வீழ்த்த முடியவில்லை. எதனால் மகிஷனை அழிக்க முடியவில்லை என்று அறிந்த போது பெண்ணால் தான் தனக்கு மரணம் வரவேண்டும் என்ற வரத்தை பிரம்மனிடம் பெற்றதால் தான் தன்னால் மகிஷனை அழிக்க முடியவில்லை என்பதை உணர்ந்து விஷ்ணு பகவான் சிவனிடம் முறையிட சிவன் தன் சக்தியால் "சந்தியாதேவி" என்ற சக்தியை உருவாக்கினார். அந்த சக்தியின் கண்கள் கறுப்பு, சிவப்பு, வெண்மை என்ற நிறத்தில் இருந்தது.

' "போருக்கு வா" என்று மகிஷனை அழைத்ததால் நிச்சயம் அவன் வரமாட்டான். உசாராகி விடுவான். அதனால் மகிஷனை தன்னிடம் போர் செய்ய வர வேண்டும் என்ற எண்ணத்தில் சந்தியாதேவி மகிஷன் பார்வையில் விழும்படி நடந்து சென்றான்.

சக்தியின் அழகில் மயங்கிய மகிஷன் சக்தியை திருமணம் செய்ய தூது விட்டான். இதைக் கேட்ட சந்தியா தேவி "தன்னை யார் போர் செய்து வீழ்த்துகிறார்களோ அவரைத்தான் நான் திருமணம் செய்வேன்" என்று மகிஷனின் தூதுவனிடம் சொல்லி அனுப்பினான்.

இதனால் மகிஷன் தன் வீரர்களை தேவியிடம் போருக்கு அனுப்பினார். ஆனால் தேவியிடம் போர் செய்தவர்கள் உயிருடன் திரும்பாததைக் கண்ட மகிஷன் கடசியாக அவனே தேவியிடம் யுத்தத்திற்கு வந்தான்.

தேவி மகிஷனை பலமாகப் போராடி அவனுடை எருமைத் தலையை தன் சக்கரத்தால் வெட்டி வீழ்த்தினால். மகிஷன் மரண்டான். இதைக் கண்ட தேவர்கள் மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள்.

மகிஷனிடம் போராடி போர் செய்து தேவலோகத்தையும் பூலோகத்தையும் காப்பாற்றியதால் "மகிஷாசுரமர்த்தினி" என்று சக்தி தேவியைப் போற்றினார்கள். ஒன்பது நாள் போர் செய்து பத்தாவது நாள் தேவி வெற்றி பெற்றதால் விஜயதசமி உருவானது.

அன்பு மாணவர்களே!
நவராத்திரியை முன்னிட்டு பிரசுரமாகும் "நவராத்திரிப்பாமாலை" கவிதைகளை உங்கள் பெயர், பாடசாலையின் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு ஆசிரியர் வலம்புரி "நவராத்திரி பாமாலை" இல, 03, 02 ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

போதைப்பொருள் கடத்தல் மன்னன் கியூ பிரிவு பொலிஸாரால் கைது



(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த போதைப் பொருள் கடத்தல் மன்னன் சுனில் ஜெமினி பொன்சேகா என்கிற "கட்ட காமினி" பெங்களூரில் தலைமறைவாகி இருந்த வேளை சென்னை மற்றும் காஞ்சிபுரம் கியூ பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் செங்கல்பட்டு குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிபதி உத்தரவின் பேரில் பின்னர் அவர் புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் இருந்து தப்பிய கட்டகா மினி தமிழகத்தில் தஞ் சம் அடைந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள புதுப்பாக்கம் என்ற இடத்தில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த 6 மாதங்களாக சட்டவிரோதமாகப் பதுங்கி இருந்துள்ளார்.

இங்கிருந்தபடியே இலங்கை உள்ளிட்ட பல நாடுகளில் போதைப் பொருள் கடத்தலுடன் கட்ட காமினி நேரடி தொடர்பு வைத்திருந்தார்.

இந்நிலையில், சர்வதேச நிழலுலக தாதா தாவூத் இப்ராஹிம், இவருக்குத் தொடர்பு உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனால் அவருடைய தொலைபேசி இலக்கத்தை வைத்து பொலிஸார் அவரைக் கைது செய்ய முயன்றனர்.

இதனை அறிந்த அவர் காஞ்சிபுரத்தில் இருந்து பெங்களூருக்குத் தப்பி சென்றுவிட்டார்.

இதனை அறிந்த காஞ்சிபுரம் கியூ பிரிவு பொலிஸ் தனிப்படையினர் தப்பிச்சென்ற கட்டகாமினியை பெங்களூரில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். (ஜ-4)

பிரதமர் அலுவலக பிரதானியாக யோசித; வாழ்த்து தெரிவித்தது சீன தூதரகம்

(கொழும்பு)

பிரதமர் அலுவலகப் பிரதானியாக யோசித ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது. இந்நிலையில் இலங்கைக்கான சீனத் தூதரகம், யோசித ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

சீனத்தூதரகம், தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக யோசித ராஜபக்ஷவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளது.

இவ்வாறு வாழ்த்தை தெரிவித்த சீன தூதரக அதிகாரி ஹூவெய், இரு தரப்பு உறவுகள் அண்மையில் உயர்மட்ட விஜயங்களின் பின்னரான நிலைமை குறித்து ஆராய்ந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு நெல் மீட்பு

(அநுராதபுரம்)

அநுராதபுரம் பிரதேசத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு நெல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அநுராதபுரம் - மஹவிலச்சிய பகுதியில் நெல் களஞ்சியசாலையொன்றை நுகர்வோர் விவகார அதிகார சபையினர் சுற்றிவளைத்த போது குறித்த நெல் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த நெல் களஞ்சியத்தில் இருந்து சுமார் 5 மெற்றிக்தொன் அளவிலான நெல் கைப்பற்றப்பட்டதாக அதிகார சபை தெரிவித்துள்ளது. இடைத்தரகர்கள் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்து அவற்றினை சந்தையில் விநியோகிக்காது களஞ்சியப் படுத்தியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது. (நி-7)

கடல் புறா

அபாய அறிவிப்பு!



புரவியில் ஆரோகணித்துச் சென்ற கருணாகர பல்லவன், தன்னை அழைத்துச் செல்லும் வீரர் இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து வணிகர் பெரு வீதிக்குள் புகுவதைக் கண்டதும், 'சரி சரி, இவர்கள் கோடிக்கரைக் கூலவாணிகன் விடுதிக்கு அழைத்துச் செல்கிறார்கள்.

புறாதான் தவறு செய்துவிட்டது. நண்பர்களை விரோதிகளாக நினைத்துவிட்டது.' என்று நிச்சயப்படுத்திக் கொண்டான். அந்த நிச்சயத்தால் வெகு அலட்சியமாகப் புரவியை நடத்திக்கொண்டு வீரர்களுடன் சென்றான்.

இரண்டு மூன்று வீதிகளைக் கடந்து வணிபர் பெருவீதியின் கோடியிலிருந்த பெரிய மாளிகையொன்றின் முன்பு வந்ததும் வீரர்கள் இளைய பல்லவனை இறங்கச் சொன்னார்கள்.

புரவியிலிருந்து இறங்கியதும் கோடிக்கரைக் கூலவாணிகனின் அந்த மாளிகைக்குள் சர்வசகஜமாக நுழைந்தான் இளையபல்லவன். மூன்றாம் ஜாமம் நெருங்கிக் கொண்டிருந்த அந்த வேளையிலும் கூலவாணிகனின் மாளிகைக் கூடத்தில் பெருவிளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கூடத்தின் நடுவில் பெரும் கூட்டமொன்று உட்கார்ந்திருந்தது.

அதன் நடுவிலிருந்து எழுந்த கூலவாணிகனைக் கண்ட கருணாகர பல்லவன் பெரும் வியப்புக்கு மட்டுமல்ல அதிர்ச்சிக்கும் சீற்றத்துக்கும் உள்ளானான்.

புறாவின் அபாய அறிவிப்பில் பிசகில்லை என்பதை உணர்ந்தான். அவன் கை, மின்னல் வேகத்தில் வாளை நாடிச் சென்றது. மீண்டும் ஸ்தம்பித்தான் அவன். உறையில் வாள் இல்லை. பேரிடி போன்ற சிரிப்பொலியொன்று அவன் பின்புறத்திலிருந்து எழுந்தது.

வலைக்குள் வந்த சிங்கம்

பாலூர்ப் பெருந்துறையில் பெருவணிகர் வீதிக்குள் நுழைந்த சமயத்திலோ, கூலவாணிகனின் மாளிகைக் கூடத்துக்குள் வந்த விநாடியிலோ எந்தவிதச் சந்தேகத்திற்கும் இடங்கொடாத இளையபல்லவன் அந்தக் கூடத்தில் உட்கார்ந்திருந்த பெருங்கூடத்தின் நடுவிலிருந்து கூலவாணிகன் எழுந்த தோரணையைக் கண்டதுமே ஏதோ விபரீதம் நேர்ந்திருக்கிறதென்ற தீர்மானத்துக்குள்ளானானென்றால், கூலவாணிகனின் முகத்திலிருந்த திகிலையும் அவனிருந்த கோலத்தையும் கண்டதும் அபாரமான அதிர்ச்சிக்கும் சீற்றத்துக்கும் இடம்கொடுத்தான்.

தாறுமாறாகக் கிழிக்கப்பட்டிருந்த உடைகளுடனும் முகத்தில் மிதமிஞ்சிய திகிலுடனும், கயிறுகளால் பிணைக்கப்பட்ட கைகளுடனும் எழுந்து நின்ற கூலவாணிகனையும் அவனைச் சுற்றிலும் வணிகர் உடையிலிருந்த கலிங்கவீரர் கூட்டத்தையும் பார்த்த கருணாகர பல்லவன், உண்மையைக் கண்ணிமைக்கும் நேரத்தில் புரிந்து கொண்டு வாளை உருவ, கச்சையை நோக்கிக் கையைக் கொண்டுபோன சமயத்தில், தன் வாளும் மிகத் தந்திரமாகப் பின்புறத்திலிருந்து உருவப்பட்டுவிட்டதையும், அந்த வாளை உருவியவன் வெளியிட்ட பேய்ச் சிரிப்பு அந்தக் கூட்டத்தையே இடித்து விடுவதுபோல் ஒலித்ததையும் கவனித்து, ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான்.

மறுகணம், தன்னை நோக்கி அப்படி நகைத்தவனைப் பார்க்கப் பின்புறம் திரும்பினான். அப்பொழுதுதான் சிரிப்பைச் சற்று அடக்கிக் கொண்ட கலிங்க மன்னன் பீமன், முகத்தில் பரவிய கேலிப் புன்னகையுடன் அவனெதிரே காட்சியளித்தான்.

எதை எதிர்பார்த்தாலும், கலிங்கத்து மன்னன் தலைநகரை விட்டுப் பாலூர்ப் பெருந்துறைக்கு வருவானென்பதைக் கனவிலும் எதிர்பார்க்காத கருணாகர பல்லவன், தன் அதிர்ச்சியையும் சீற்றத்தையும் சிறிதளவு உதறிவிட்டுச் சற்று வியப்பு மண்டிய வதனத்துடனேயே மன்னனை ஏறெடுத்து நோக்கினான்.

சோழ நாட்டு விஸ்தரிப்பு வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடும் உறுதி கலிங்கத்து மன்னன் முகத்திலிருந்ததையும், சில வருடங்களுக்கு முன்பு தான் சந்தித்த போதில்லாத சதைப் பிடிப்பும் அவனுக்குண்டாகி, பெயருக்குத் தகுந்தபடி உயரம் பருமனுடன் அவன் அசல் பீமனாகவே விளங்கியதையும் கண்ட கருணாகர பல்லவன், பலமும் யுக்தியும் நிறைந்த பெருவிரோதியின் முன்பு தானிருப்பதை உணர்ந்தான்.

கலிங்கத்து மன்னன் அந்தச் சமயத்தில் ராஜரீகத்துக்கான உடையேதும் அணியாமல் சயனத்துக்குச் செல்லும் சாதாரண உடையே அணிந்திரந்ததையும், தன்னிடமிருந்து லாகவமாக உருவிவிட்ட தன் வாளைத் தவிர வேறு வாள் ஏதும் இல்லாமல் அவன் மிக அசட்டையாக நின்றிருந்ததையும் கவனித்த கருணாகர பல்லவன், அவன் நெஞ்சுரத்தைப் பெரிதும் வியந்தான்.

தன் வீரர்களோடு ஒரு வீரனாகப் பழகும் கலிங்கத்துப் பீமனின் வீரர்களை அவனிடமிருந்து எந்தவிதத்திலும் பிரிப்பதோ அவர்களில் யாரையும் தன் உதவிக்கு இணைப்பதோ முடியாத காரியமென்பதும் வெட்ட வெளிச்சமாயிற்று இளைய பல்லவனுக்கு.

உதடுகளும் கன்னங்களும் தடித்து நின்றதால் ஓரளவு பயங்கரமாகத் தெரிந்த பீமனது முகத்தில் பளிச்சிட்ட கண்கள் தன்னை ஊடுருவிப் பார்ப்பதையும் புரிந்துகொண்ட இளையபல்லவன் தன்னைத் திடப்படுத்திக்கொள்ள பீமனிடமிருந்து திரும்பிக் கூலவாணிகனின் கூட்டத்தையும் அங்கு குழுமியிருந்த கலிங்கத்து வீரரையும் கவனித்தான்.

அரண்மனையையும் தோற்கடிக்கும் சிறப்பு வாய்ந்த கோடிக்கரைக் கூலவாணிகன் சேந்தனின் பெருமாளிகைக் கூடம் சுமார் ஆயிரம் பேருக்கு ஒரே காலத்தில் விருந்தளிக்கக்கூடிய அளவுக்கு விசாலமாயிருந்தது. ஆங்காங்கு ஒவ்வொரு மூலையிலுமிருந்த திண்டு திவாசுகளும் கணக்கெழுதும் பெட்டிகளும், விதவிதமான சரக்கு மூட்டைகளும் பலதரப்பட்ட வியாபாரம் அங்கு நடப்பதை உணர்த்தின.

அந்த மாளிகைக் கூடத்தின் மேற்கூரையில் பலநாட்டு ஓவியங்களால் தீட்டப்பட்ட வண்ணச் சித்திரங்கள், கூலவாணிகனின் செல்வச் சிறப்புக்கு அத்தாட்சியாய் விளங்கின. இத்தனை செல்வச் சிறப்பிருந்தும், வர்த்தக விஸ்தரிப்பிருந்தும், அரசியலில் சிக்கிய ஒரே காரணத்தால் கூலவாணிகன் அன்று துன்புறுத்தப்பட்டு, கைகள் பிணைக்கப்பட்டு நின்ற பரிதாபக் கோலத்தைக் கண்ட கருணாகர பல்லவன், கூலவாணிகன் சேந்தனிடம் பெரும் அனுதாபமே கொண்டான்.

பீமன் கையில் வகையாய்ச் சிக்கிவிட்ட தனக்கும் கூலவாணிகனுக்கும் என்ன கதி கிடைக்குமென்பதைச் சந்தேகத்துக்கிடமின்றிப் புரிந்து கொண்ட இளைய பல்லவன், மேற்கொண்டு நடப்பது நடக்கட்டுமென்று பீமனை நோக்கி மீண்டும் திரும்பி "கலிங்கத்து மன்னரை இங்கு நான் எதிர்பார்க்கவில்லை" என்று சம்பாஷணையில் மெள்ள இறங்கினான்.

பீமனுடைய பெரும் மீசையும் கறுத்த பெரிய புருவங்களும் ஆச்சரியத்துக்கு அறிகுறியாக ஒருமுறை எழுந்து தாழ்ந்தன. "தாங்கள் எதிர்பார்க்காத சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன இந்த இரவில்!" என்று பதிலுக்குச் சொற்களை உதிர்த்த அவன் உதடுகளில் புன் முறுவலொன்றும் படர்ந்தது.

மன்னன் பதிலிலிருந்து அவன் தன்னைப்பற்றிய பல விபரங்களை அறிந்திருக்கிறானென்பதை இளையபல்லவன் உணர்ந்து கொண்டானேயொழிய, அந்த விபரங்கள் என்னவாயிருக்கக் கூடும் என்பதை அறியாததால் அவற்றைப் பற்றித் தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன், "உண்மைதான்! நள்ளிரவில் வணிகர் விடுதிக்கு மன்னர் வருவது நான் எதிர்பார்க்காத சம்பவம்தான். இத்தகைய விஜயத்துக்குக் கலிங்கத்தின் சம்பிரதாயம் இடம்கொடுக்கிறதா?" என்று வினவினான்.

பீமன் முகத்தில் ஆலோசனை படர்கிறது. ஏதோ யோசித்துவிட்டுச் சொன்னான். "சம்பிரதாயம் இடம் கொடாதுதான். ஆனால் எல்லாம் வணிகர் செய்யும் வாணிபத்தைப் பொறுத்தது".

(தொடரும்...)

றிசாத் பதியுதீன் விவகாரம் சஜித்திடம் விசாரணை

(கொழும்பு)

வாக்குமூலம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குற்றப்புலனாய்வு பிரிவினர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வீட்டுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தொலைபேசி ஊடாக கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ள நிலையில் இது குறித்து வாக்கு மூலம் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சஜித் பிரேமதாஸவின் வீட்டுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது, தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் அவரை கைதுசெய்யுமாறு சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

குற்றவியல் கும்பலை சேர்ந்தவரை விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

குற்றவியல் கும்பல் உறுப்பினரான பொடி லாஸ்லியை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க காலி தலைமை நீதவான் குற்றப் புலனாய்வு அதிகாரிகளுக்கு அனுமதியளித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளின் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் காலி தலைமை நீதவான் ஹர்ஷனா கெகுனாவெல இந்த அனுமதியை வழங்கினார்.

அதன் பின்னர் சந்தேக நபர் நேற்று முன்தினம் பிற்பகல் சி.ஐ.டி. அதிகாரிகளினால் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் சிறைச்சாலைத் துறையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு மரண அச்சுறுத்தல் விடுத்த வழக்கில் பொடி லாஸ்ஸி இரண்டாவது சந்தேக நபராக பெயரிடப்பட்டார். (ஜ-4)

விசேட சுற்றிவளைப்பு எண்மர் கைதாகினர்

(கொழும்பு)

நாட்டின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் ஹெரோயினுடன் பெண் உள்ளிட்ட சந்தேக நபர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய ருவன் வெல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக் கைகளில் காரில் ஹெரோயின் கடத்திய பெண்ணொருவர் உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கேகாலை - தொடங்தென்ன பகுதியைச் சேர்ந்த 32 வயதான ஒருவரும் வட்டரெக்க - மீகொட பகுதியைச் சேர்ந்த 30 வயதான பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மீகொட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 6 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொறளை - வோட் பிரதேசப் பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் ஹோகந்தரை தெற்கு பகுதியில் வைத்து 20 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

அத்துருகிரிய - கல்பொத்த வீதி பகுதியில் வைத்து 30 கிராம் 450 மில்லிகிராம் ஹெரோயினுடன் அதே பகுதியைச் சேர்ந்த 36 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸை ஒடியன் திரையரங்கிற்கருகில் கல்கிஸை ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 3 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயினுடன் இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 22 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மேல் மாகாண புலனாய்வு பிரிவினர் பொறளை - ஓவல் விளையாட்டு மைதானத்திற்கருகில் முன்னெடுத்த சுற்றிவளைப்பில் ஹெரோயினுடன் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2145

மதன்ராஜ்



துசியா



மதிவாணன்

கம்சா

யுதேஷ்



கஸ்தனி



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

கற்பித்தலில் ஆசிரியரின் சில நடிபங்குகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

முதல் வகையில், பல பாடசாலைகள் உள்ளன. சில ஆரம்பப் பாடசாலைகள் இத் தன்மையான இயல்புகளைக் கொண்டவை. இதற்கு யார் காரணம்? பெற்றோர்களின் ஸ்திரமற்ற குடும்ப நிலைமைகள் முக்கியமானவை.

இதனால் அவர்கள் பிள்ளையினுடைய கல்வியில் அக்கறையீனமுடையவர்களாக இருப்பர். பல பிள்ளைகள் பாலர் கல்வி அனுபவங்கள் இன்றிப் பாடசாலைகளில் ஆண்டு ஒன்றிற்குள் நுழைகின்றார்கள்.

ஆண்டு ஒன்றில் பாலர் கல்வியூடாக வந்த மாணவர்களும் இருப்பார்கள். இதனால் தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந் நிலைமையை உணர்ந்து கற்பித்தலைச் செய்தல் வேண்டும். ஆண்டு ஒன்றில் ஏற்படும் தவறுகள் நீண்ட காலக் கல்வி இலக்குகளை அடைய முடியாமல் மாணவர்களது வாழ்க்கை சீரழிந்து விடும்.

இப்படியான பெரும்பாலான பாடசாலைகளில் பெற்றோர்களை பாடசாலைகளுக்கு அழைத்தாலும் சமூகம் கொடுக்க மாட்டார்கள். இதனால் கற்பித்தல் தொழிலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கும் ஒரு சங்கடமான நிலை தோன்று கின்றது. ஆசிரியர்கள் அங்கே பாவிக்கின்ற சொற்பிரயோகங்கள் மிக முக்கியமானவை.

தவறு ஏற்படுமாயின் அவை கல்வி கற்கும் மாணவர்களது நனவடி நிலைக்குச் செல்கின்றன. பின் மாணவனது பாடசாலை வாழ்க்கைக் காலத்திலேயே பிழையான நடத்தை மாற்றங்கள் உருவாகுவதை அவதானிக்கலாம். பின்னர் வருந்துவதனால் பயனில்லை.

இரண்டாம் வகைப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடையே ஓரளவு மொழியறிவு உண்டு. பெற்றோர்களது பாடசாலை தொடர்பும் ஓரளவு உண்டு. ஆசிரியரது கற்பித்தல் தான் சிக்கலானது. நியமத்திற்கு ஏற்ப கற்பிக்க முடியாது.

பாடசாலை மாணவர்களின் தரத்தை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் தன்னுடைய கற்பித்தல் செயற்பாடுகளைக் கொண்டு செல்லல் வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளது மனதில் காயங்களை ஏற்படுத்தக்கூடாது. இப்படியான ஒரு நிலைப்பாட்டினைத் தரம் இரண்டிலும், அதற்கு மேற்பட்ட சில பாடசாலைகளிலும் ஓரளவு அவதானிக்க முடியும்.

மூன்றாவது வகைப் பாடசாலைகளில் பெற்றோர்களுக்கும் பாடசாலைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. கற்றலும் பாட இணைச் செயற்பாடுகளும் மிகவும் உச்ச நிலையில் இடம் பெறும். பெற்றோர்கள் அடிக்கடி பாடசாலைகளுக்கு அழைக்கப்பட்டு மாணவர்களது குறை நிறைகள் எடுத்துச் சொல்லப்படும். இங்குள்ள சிறப்பு என்ன வெனில் நல்ல விவேக, மொழித்திறன் உள்ள பெரும்பாலான மாணவர்களோடு, இதற்கு மாறான மாணவர்களும் அங்கே கல்விகற்பர்.

மொழித்திறன்கூடிய மாணவர்கள் பயிற்சிகள் செய்கின்றபொழுது சிறிய சிறிய தவறுகள் விடுவார்கள். அதனால் அவர்களை சொற்களால் தண்டிக்கக் கூடாது. அவ்வாறு தண்டித்தால் பிள்ளைகள் அவற்றை பெற்றோர்களுக்குச் சமர்ப்பிப்பார்கள். பெற்றோர்கள் வேதனையடைவார்கள்.

அதேபோன்று மீத்திறன் குறைவான மாணவர்களும் அங்கே இருப்பார்கள். அவர்களை நிதானமாக கையாள வேண்டும். நாங்கள் பாவிக்கின்ற ஒவ்வொரு உத்தியும் அவர்களை தூண்டுவதாக அமைய வேண்டுமே ஒழிய உற்சாகம் இழக்கச் செய்யக்கூடாது.

இன்று ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி மாணவர்கள் என்ற வித்தியாசம் இல்லாமல் பெரும்பாலான மாணவர்கள் பிரத்தியேக கல்வி நிலையங்களுக்கு காலை, மாலை செல்கின்றார்கள். அதனால் பாடசாலையில் கற்ற விடயங்களைத் திருப்பிப் பார்ப்பதற்கோ அல்லது பாடஇணைச் செயற்பாடுகளுக்கு பங்கு கொள்வதற்கோ நேரமில்லை. மாணவர்களிடையே மகிழ்ச்சி என்பது இல்லை. இந்த விடயம் பாடசாலைக் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் அனைவரையும் பாதிக்கின்றது. பாடசாலைகளில் மைதானங்கள்கூட பயன்பாட்டுக்கிடக்கின்றன.

தண்டனைகள் உடல், உளம் சார்ந்து இரு வகைப்படும். இவ் இரண்டு தண்டனைகளுடனும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் சம்பந்தப்படுகின்றார்கள். இங்கிலாந்தில் பெற்றோர் பிள்ளையைத் தண்டித்தால் அவர்கள் தொலைபேசியினூடாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வர். பொலிஸார் பெற்றோரை விசாரணை செய்வர். இங்கேயும் உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டால் அது வெளிப்படையாகத் தெரியும்.

உள ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டால் அது பெரிய அளவில் வெளிப்படையாகத் தெரியாது. உளத்தில் பெரிய சுமையை, வடுவை ஏற்படுத்தும். அது கற்றலுக்குப் பொருந்தாது. இலங்கையைப் பொறுத்த வரையில் பெற்றோர்கள் சிறிது தப்பிக் கொள்கின்றார்கள். ஆனால் ஆசிரியர்கள் உடல் தண்டனைகளைக் கொடுக்க முடியாது. உளத் தண்டனைகள் கொடுத்தால் கற்றலில் பெரிய பலாபலன்களை அறுவடை செய்ய முடியாது.

நீதிமன்றமும் மனித உரிமை ஆணைக்குழுவும் ஐ.நா.சபையும் இவ்விடயத்தில் தீவிரமாக உள்ளன. மாணவர்கள் பிழையான சீராக்கத்திற்குட்படுகிறார்கள் எனில் அதற்கு நாங்கள் தான் காரணம்.

இப் பிழையான சீராக்கத்தினால் நன்னடத்தைப் பாடசாலைகளும் அமைப்புகளும் தோன்றியுள்ளன. இன்று பெற்றோரை இழந்த ஒரு தொகுதிப் பிள்ளைகளும் எங்கள் கண்முன்னே வாழ்கின்றார்கள். அவர்களுக்கான அன்பையோ கணிப்பையோ ஆதரவையோ சமுதாயத்தில் கொடுக்கக்கூடிய எவருமில்லை. சில பிள்ளைகள் உறவினர்களோடு விரக்தியுடன் வாழ்கின்றார்கள். பல பிள்ளைகள் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் வாழ்கின்றார்கள்.

இவர்களுடைய வாழ்க்கை எவ்வாறு அமையும். அவர்கள் வெளியுலகைப் பார்க்கின்ற பொழுது ஏற்படும் ஆசாபாசங்களில் இருந்து எப்படித் தப்பிக் கொள்வர். ஆசிரியர்களுடைய முறையான நடவடிக்கைகளால் இவர்களது சில உளவியல் தேவைகளை நிறைவு செய்ய முடியும். இதை ஒவ்வொரு ஆசிரியரும் புரிந்து கொள்ள வேண்டும். அன்பையும் கணிப்பையும் எப்பொழுதும் எதிர்பார்ப்பார்கள். பொறாமை, ஆசை, வேதனை போன்ற மன எழுச்சிகள் மேலோங்கி நிற்கும்.

இன்று மாணவர்களை ஒழுக்க சீலர்களாக ஆக்க வேண்டிய பொறுப்பு பெற்றோரையும் பாடசாலைகளையும் சார்ந்ததாகும். ஆனால் இன்று ஒரு தொகுதி மாணவர்களுக்கும் பெற்றோர் ஆசிரியர்களுக்கு மான தொடர்பு தொலைதூரத்தில் சென்றுள்ளது. தம் பிள்ளைகளை வழி காட்ட முடியாமல் பெற்றோர்கள் தவிக்கிறார்கள். ஆசிரியர்களும் வெளியே சொல்ல முடியாமல் ஆதங்கப்படுகிறார்கள். மாணவர்களும் கற்ற இளைஞர்களும் இவ்வாறு பிழையான நடத்தைகளுக்கு செல்வதற்குச் சமூகமும் காரணமாக இருக்கின்றது. வறுமையின் கொடுமையால் பல விற்பனைப் பிரதிநிதிகளும் தோன்றியுள்ளார்கள்.

இது எமது நாட்டில் உள்ள பிரச்சினையல்ல. இது அகிலம் முழுவதற்கு மான விடயமாகும். சமுதாயத்தில் கொலை, கொள்ளை அதிகரித்துள்ளன. யாரும் கட்டுப்படுத்த முடியாது. வேலி பயிரை மேய்ந்த கதைகள் நிறைய உள்ளன. இந்த விடயங்களால் கோடீஸ்வரரான பெரு மக்களும் காணப்படுகின்றார்கள். ஆனால் பாடசாலை மாணவர்கள் இதற்கு இரையாகியுள்ளனர் என்பதை நினைக்கும் பொழுது மனம் வேதனையடைகின்றது. இது பொருத்தமா?

பெற்றோர்களே! நீங்கள் பல வேறு எதிர்பார்ப்புக்களுடன் ஆசையாக வளர்த்த உங்கள் பிள்ளைகள் கண்முன்னே அழிந்து போவதை விரும்புகின்றீர்களா! கண்முன்னே இளவயதில் கூலித் தொழில் செய்து வேதனையோடு வரும் உங்கள் பிள்ளைகள் தொடர்பாக சிந்திப்பது இல்லையா. சிறப்பு நிலையடைந்த பிள்ளைகளே சமுதாயத்தில் நல்ல கணிப்பைப் பெறுகின்றார்கள். மரியாதையுடன் வாழ்கின்றார்கள். அப்படியான ஒரு நிலையை, நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்த ஏன் தவறுகிறீர்கள். இதனால் ஏற் படும் விரக்தி பிள்ளைகளை மீளப் பெறமுடியாத இன்னொரு நிலைக்குக் கொண்டு சென்று விடும். அதை

வீ.இராசையா
ஓய்வுநிலை
மாகாணக் கல்விப்
பணிப்பாளர், வடமாகாணம்.

நீங்கள் விரும்புகின்றீர்களா?

மதத் தலைவர்களே! மதங்கள் தூரச் சென்று விலகியுள்ளன. சீர் கேடுகளைப் பற்றி கதைக்கப்படுகின் றன. சமயப் பிரசங்கம் செய்வது மட்டும் உங்களுடைய கடமையல்ல. சமு தாயத்தின் தேவையை உணர்ந்து அதற்கேற்ப தொழிற்படுதல் வேண்டும்.

மதமாற்றம் தொடர்பாக விமர்சிக் கிறோம். நல்ல மனம் கொண்ட எவராவது அத்தடைகளை சுக்கு நூறாக்க முயன்றீர்களா? சில பிரதேசங்களில் மத ரீதியான பிரச்சினைகள் இறுக்கமாக உள்ளன. அதில் உங்களால் தளர்வுகளை ஏற்படுத்த முடிந்ததா?

ஆசிரியர்களே! நீங்கள் தான் பாடசாலைச் சமூகத்தினது வழி காட்டிகள். பெற்றோருகளுக்குச் சமனாக அல்லது அடுத்ததாக நீங்கள் இருப்பதாக கருதப்படுகின்றது. அதனால் ஒரு பிள்ளையினுடைய பதின் மூன்று வருடக் கல்வி வாழ்க்கை உங்கள் கைகளில் உள்ளது.

பூச்செடிகளை கண்ணும் கருத்துமாக எப்படி பாதுகாத்து வளர்த்துப் பயன்பெறுகிறோமோ அதே போன்று பிள்ளைகளின் வளர்ச்சியிலும் கண்ணுங் கருத்துமாகத் தொழிற்படுதல் வேண்டும். பாடசாலையில் குறித்த மாணவனது நடத்தையை சீராக்கம் செய்ய முடியவில்லையெனில் சமுதாயத்திற்குள் இறங்குதல் வேண்டும். சமூக நிறுவனங்களை உற்சாகப்படுத்தி தொழிற் படவைக்க வேண்டும்.

எந்தவொரு பெற்றோரும் தன்னுடைய பிள்ளை குறித்த பிழையைச் செய்தது என்பதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இது பெற்றோரினுடைய இயல்பு. அதை நாங்கள் புரிந்து கொள்ள வேண் டும். நோய் முற்றிய பின்பு பரிகாரம் செய்ய முடியாது. அதன்பின் இறுதிவிளைவு ஒன்றுதான். அது ஆசிரியர்களாகிய உங்கள் கைகளில்தான் இருக்கும்.

ஏதாவது பாதிப்புகள் உங்களுக்கு வரும் எனில் சமுதாயம் உங்களுடன் நிற்கும். நீங்கள் கல்வி போதித்த ஒரு மாணவன் ஆசிரியனாகவோ, சட்டத்துறை வல்லுநராகவோ, தனிப்பட்ட தொழில் நிபுணராகவோ காண்கின்ற பொழுது எவ்வளவு பெருமை அடைவீர்கள்.

(முற்றும்.)

கொழும்பு மக்களுக்கான அறிவித்தல்

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையினால் பொதுமக்களுக்கு விசேட அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. இதன்படி, கொழும்பு மாநகர சபையின் ஊடாக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை, கொழும்பு மாநகர சபையின் பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள single window கருமபீடத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய, கொழும்பு மாநகர சபையின் பிரதான அலுவலகத்திற்கு உள்நுழைவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், வரிப்பணம் செலுத்தும் நடவடிக்கைகளை, கொழும்பு நகரிலுள்ள இலங்கை மக்கள் வங்கி மற்றும் மக்கள் வங்கியின் அலுவலகங்களினூடாக மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகள், கொரோனா அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

பிரதமருக்கு எதிரில் கண்ணாடி அரண்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் அவர் அமர்ந்திருக்கும் ஆசனத்திற்கு எதிரில் கண்ணாடி அரண் அமைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் மீண்டும் தலைதூக்கி உள்ள நிலையில், அதில் இருந்து தற்காத்துக்கொள்ள இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதமர் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் நபர்கள், சுகாதார ஆலோசனைக்கு அமைய ஒரு மீற்றர் தூர இடைவெளியில் அமரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ)

ஆன்மீகம்

கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்!

அன்றிலிருந்து இன்றுவரை பலபேர் ஒரு பழக்கத்தை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதால் அதை நாம் அப்படியே பின்பற்ற வேண்டும் என்று எவ்வித அவசியமும் இல்லை. அதே சமயத்தில் அதை அடியோடு அங்கீகரிக்கக்கூடாது என்பதும் இல்லை. அதன் சாதக பாதகங்களை ஆராய்ந்து தள்ள வேண்டியவற்றைத் தள்ள வேண்டும், கொள்ள வேண்டியவற்றை மேற்கொள்ள வேண்டும். இன்றைய நாகரீக விஞ்ஞான யுகம் சொல்வதெல்லாம் சரியல்ல, முன்னோர்கள் பின்பற்றியதே முறையானது என்று சொல்பவர்கள் ஒரு பக்கம் புதுமைகளை வரவேற்க மனமில்லாத பழம் பஞ்சாங்கவாதிகளை புறக்கணியுங்கள் என்று சொல்பவர்கள் இன்னொரு பக்கம். யார் பக்கம் சேருவது? யார் சொல்வதை நாம் பின்பற்றுவது?

'கண்ணால் காண்பதும் பொய்! காதால் கேட்பதும் பொய்! தீர விசாரித்து அறிவதே மெய்!' என்பதை நாம் உணர்ந்து அதன் வழி நடப்பதே உத்தமமானது. 'தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா! - இன்று தோன்றியவாம் எனும் எவையும் தீதாகா!' - என்று மனதில் பதியும் வண்ணம் விளக்குகின்றார் மனோன்மணீயம் சுந்தரனார். உலகம் தட்டையானது. இந்த உலகைச் சூரியன் சுற்றி வருகிறது என்றுதான் பழங்காலத்தில் அனைவரும் எண்ணியிருந்தார்கள். கண்ணால் காணும்போது அதுதான் உண்மை! அப்படித்தான் தெரிகிறது என்று தானே இப்போதும் நாம் எண்ண முடிகிறது! தீர விசாரித்து, ஆய்வுகள் மேற்கொண்டு 'கலிலியோ' சொன்னார்: 'உருண்டை வடிவம் கொண்டது உலகம்.'

உலகம் தன்னைத் தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. அவர் சொன்னதைக் கேட்ட அன்றைய மக்கள் கலிலியோவைப் பைத்தியக்காரன், முட்டாள் என்று பழித்தனர். பிறகுதான் உலகம் புரிந்து கொண்டது, கண்ணால் பார்ப்பதும் காதால் கேட்பதும் அறிவால் ஆராய்வதற்கே என்பதை! ''என் நண்பர்கள் சொன்னார்கள் என்பதால் தான் இந்த புதிய தொழிலில் ஈடுபட்டு காரியத்தில் இறங்கினேன். இப்போது கையை சுட்டுக் கொண்டு விட்டேன்'' என்று ஒருவர் புலம்புவதையும், 'அவர்கள் சொன்னதை அப்படியே நம்பி விட்டாயா? உன் அறிவு எங்கே போச்சு? யோசிக்க வேண்டாமா?' என்று அவரது உறவினர்கள் கடிந்து கொள்வதும் நாம் சாதாரணமாகக் காணும் காட்சிதான்.

தீர விசாரித்து அறிந்த பிறகே எச் செயலிலும் ஈடுபட வேண்டும் என்பதைத் 'தெரிந்து செயல் வகை' எனும் அதிகாரத்தின் பத்துக் குறட் பாக்கள் மூலம் நமக்குப் பாங்குற விளக்குகின்றார் திருவள்ளுவர். சாத்திரங்களையும், தோத்திரங்களையும் நன்கு கற்றறிந்த பண்டிதர் ஒருவர் தனுஷ் கோடி புண்ணிய தீர்த்தத்தில் நீராடச் சென்றார். அன்று சூரிய கிரகண சுபதினம். அவர் கையில் தன் வீட்டிற்கு எடுத்துச் செல்வதற்காக வாங்கிய சிறிய பிள்ளையார் விக்கிரகம் ஒன்று இருந்தது.

'கையில் விக்கிரகத்தை வைத்துக் கொண்டு எப்படி நீராடுவது? இதை பத்திரமாக எங்கே வைக்கலாம்' என்று நினைத்த அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

(தொடரும்...)

செய்திச்சுருக்கம்

துப்பாக்கி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் ஒத்திவைப்பு

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டிற்கான துப்பாக்கி அனுமதிப் பத்திரம் மற்றும் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் நடவடிக்கைகள் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்பொழுது காணப்படும் கொரோனா வைரஸ் நிலைமையைக் கருத்திற் கொண்டு துப்பாக்கி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு வருகை தரும் பொதுமக்களின் வருகையை மட்டுப்படுத்தும் பொருட்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கி அனுமதிப்பத்திரம் மற்றும் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் புதுப்பித்தல்களுக்கான அனுமதி பாதுகாப்பு என்பன அமைச்சினால் மாத்திரம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-7)

தென் மாகாணத்தில் 922 பேர் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின்பேரில் 922 பேர் தென் மாணகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தென்மாகாண சுகாதார சேவைகள் இயக்குநர் வைத்தியர் சந்திமா சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது, "காலி மாவட்டத்தில் 348 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 328 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 246 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி-7)

மின்தூக்கி உடைந்ததில் இருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி, லேவெல்ல பகுதியில் புடைவைக்கடையொன்றில் மின்தூக்கி உடைந்து விழுந்ததில் இருவர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இந்த சம்பவம் இடம் பெற்றது. (ஜ-4)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	மருதனார்மடம்	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	100	80	100	120
உருளைக்கிழங்கு	140	140	100	150
பச்சைமிளகாய்	120	140	160	150
தக்காளி	100	150	160	120
மரவள்ளிக்கிழங்கு	80	60	100	80
கோவா	140	120	130	120
கரட்	100	160	180	200
பூசணி	60	50	60	60
புடோல்	80	80	80	80
வாழைக்காய்	60	60	70	100
சின்னவெங்காயம்	200	200	200-220	240
பெரியவெங்காயம்	140	100	130	160
பாகற்காய்	250	300	200-220	200
வெண்டிக்காய்	70	80	60	80
கருணைக் கிழங்கு	100	90	200	100
பயற்றங்காய்	120	100	60	80
லீக்ஸ்	80	100	90	80
பீற்றூட்	80	80	100	100
கறிமிளகாய்	200	200	180	240
முருங்கைக்காய்	150	140	100	80
போஞ்சி	180	240	140	200
கத்தரிதம்புள்ள	80	80	100	100
கீரை - 1 பிடி	40	20	40	30
தேசிக்காய்	120	160	140	160
தேங்காய் (ஒன்று)	80	90	75	60-80
இராசவள்ளி	250	300	--	300
வெங்காயப்பூ	200	200	--	240
முள்ளங்கி	80	60	70	80
பொன்னாங்காணி	40	35	50	40
வல்லாரை	20	40	20	30
ஈரப்பலா	60	90	--	--

சிறுவர் அரங்கம்

நாளைய உணவு

சில வெள்ளாடுகளும், செம்மறி ஆடுகளும் தன் குட்டிகளுடன் புல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தன.

அப்போது செம்மறி ஆட்டுக் குட்டிகள் நுனிக்கொழுந்துகளாகப் பார்த்து மேய்ந்து கொண்டிருந்தன.

அதைக்கண்ட வெள்ளாடு, "என் அருமை செம்மறிக்குட்டிகளே, இப்படி நுனிக்கொழுந்தாக மேய்ந்தால் நாளை நமக்கு உணவு கிடைக்காது. அதனால் கூடுமானவரை, நுனிக் கொழுந்தைக் கடிக்காதீர்கள்.

இன்று ஒருவருக்கு மட்டுமே உணவாகும் அது, தழைத்து வளர்ந்தால் நாளை நம் அனைவருக்கும் உணவாகும்" என்றது.

அதைக்கேட்ட செம்மறி ஆடு, நீ உன் வேலையைப் பார். என் குட்டிகளுக்கு எது இஷ்டமோ, அதைத்தான் உண்ணும். நீ ஒன்றும் அதைச்சாப்பிடு, இதைச் சாப்பிடாதே எனக் கட்டளையிட வேண்டாம்" என்றது காட்டமாய்.

ஆனால் வெள்ளாடு தன் குட்டிகள் நுனிக்கொழுந்தை கடிக்கவிடாமல் கவனமாய்ப் பார்த்துக் கொண்டது.

சில நாட்கள் சென்றன. செம்மறி ஆடுகள் மேய்ந்த இடத்தில் ஒரு இலை தழையைக்கூட காணவில்லை. நுனிக்கொழுந்து கடிபட்ட செடிகள் தழைக்க நாளாகும் அல்லவா?

ஆனால், வெள்ளாடுகள் மேய்ந்த இடங்களில் பசுமை தெரிந்தது. நுனிக்கொழுந்துகள் காக்கப்பட்டதால், இப்பொழுது அவைகள் சாப்பிடும் பக்குவத்தில் தழைத்து வளர்ந்திருந்தன.

வெள்ளாடுகள் வழக்கம் போல் எந்தத் தடையுமியின்றி மேயத்தொடங்கின. ஆனால், செம்மறி ஆடுகள் செய்வது அறியாது திகைத்து நின்றன. அடுத்தவர் பேச்சைக் கேட்பதா?' என நினைத்த செம்மறி ஆடுகள், தங்களுடைய அடங்காத குணத்தால் இப்பொழுது திண்டாடுவதை உணர்ந்தன. அருகில் கிடைத்த உணவை பாதுகாக்கத் தெரியாததால், அவைகள் வேறு இடம் தேடிச் சென்றன.

'இன்றைக்கு நிறைய உணவு கிடைக்கிறது என்பதற்காக, அவற்றை வீணாக்கக் கூடாது.

அது நம்முடைய நாளைய உணவாகக் கூட இருக்கலாம்' என்பதை செம்மறி ஆடுகள் உணர்ந்து கொண்டன.

நீதி: சேமிக்கப் பழக வேண்டும்.

ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

நினைவு

ராஜராஜசோழன் தனது வாழ்நாளின் இறுதி நாட்களை உடையாளூர் பகுதியில் கழித்தபோது கி.பி. 1014 இல் காலமானார். பிறகு ராஜராஜனின் உடல் உடையாளூரில் அடக்கம் செய்யப்பட்டது.

ஆனால் ராஜராஜ சோழனின் சமாதி உடையாளூரில் உள்ளதாகச் சமீபத்தில் தான் கண்டறியப்பட்டது.

கும்பகோணம் பட்டீஸ்வரம் பக்கம் இருக்கிற உடையாளூர் என்ற ஊரில் தான் ராஜராஜசோழன் அடக்கம் செய்யப்பட்ட இடம் உள்ளது என்கிற தகவலை வெளியுலகுக்குச் சொன்னவர் கும்பகோணத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஆய்வாளர் சேதுராமன்.

அவர் மைசூரில் வைக்கப்பட்டிருந்த கல்வெட்டுப் படிகளைப் பார்த்தபோது உடையாளூரில் உள்ள பெருமாள் கோயிலில் முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டு ஒன்று இருப்பதையும் அதில் ராஜராஜ சோழன் எழுந்தருளியிருக்கும் நினைவு மண்டபம் சிதிலமடைந்து இருந்ததாகவும் அதைப் பின்னர் சரி செய்ததாகவும் பொறிக்கப்பட்டிருந்தது.

ராஜராஜன் நினைவு மண்டபம்

இதன் பிறகுதான் ராஜராஜனுக்கு நினைவு மண்டபத்தூண் இருக்கும் விடயமே வெளியே தெரிய வந்தது.

நினைவு மண்டபத் தூணைத் தேடி சேதுராமன் உடையாளூர் வந்து விசாரித்தபோது அங்குள்ள பால்குளத்து அம்மன் கோயிலை புதுப்பிக்கும்போது ஒரு தூண் தேவைப்பட்டிருக்கிறது.

உடனே பெருமாள் கோயிலில் இருந்த அந்தத் தூணை எடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்கிற தகவல் கிடைத்துள்ளது. அவர் பதறியபடி பால்குளத்துக்கு அம்மன் கோயிலுக்குச் சென்று பார்த்த போது அதிர்ஷ்டவசமாக அந்தத்தூண் அங்கே இருந்திருக்கிறது.

ராஜராஜன் நினைவு மண்டபத்தூண் என்பதற்கான எழுத்துக்கள் அதில் பொறிக்கப்பட்டிருந்தன. இதை இப்பொழுது தொல்பொருள் துறையினரும் படியெடுத்து ஆவணமாக பதிவு செய்திருக்கிறார்கள்.

சோழமன்னர்கள் தஞ்சையில் அரசாண்டாலும் மன்னரின் குடும்பத்தினர் வசித்த மாளிகைகள் பழையாறையில்தான் இருந்தன. ராஜராஜனின் மனைவியர்களில் ஒருவரான பஞ்சவன்மாதேவியினுடைய பள்ளிப்படைக் கோயில், பட்டீஸ்வரத்தில்தான் இருக்கிறது.

உடையாளூர் கோயில் கல்வெட்டில் மகேஸ்வரதானம் என்கிற குறிப்பு இறந்தவர்களுக்காகக் கொடுக்கப்படுவது.

அதனால் இந்தச் சாத்தியக்கூறுகளை வைத்து இங்கேயுள்ள நினைவு மண்டபத்தூணை வைத்தும் அது ராஜராஜசோழனின் நினைவிடம்தான் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

இப்போது ராஜராஜ சோழனின் சமாதியிருப்பதாகக் கூறப்படும் இடத்தில் புதையுண்டு வெளியே இரண்டடி தெரியும் சிவலிங்கம் ஒன்று உள்ளது. அதுராஜராஜன் இறந்த இடத்தில் கட்டப்பட்ட கள்ளிப் படைக்கோயிலுக்குள் இருந்த சிவலிங்கம் என்றும் மண்ணுக்குள் ஒரு சிறிய கோயிலில் செங்கல் அடித்தளம் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதை ராஜராஜனின் சமாதி என்று சொல்ல முடியாது. அந்த இடத்தில் ராஜராஜனின் அஸ்தி வைக்கப்பட்டு அதன் மீது நினைவுமண்டபம் எழுப்பப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

தஞ்சாவூரையும் கங்கை கொண்ட சோழபுரத்தையும் அகழ்வாராய்ச்சி செய்வதைப்போலே இங்கும் மத்தியதொல்பொருள் துறை முழுவீச்சில் அகழாய்வு செய்தால் இன்னும் பல சரித்திரச்சான்று கிடைக்கும் என்று வரலாற்றாய்வாளர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (தொடரும்)

வாழ்க்கை ஒரு போர்க்களம். நம்பிக்கைதான் ஆயுதம். அறிவே கேடயம்.

– மகாவீரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

என்று கிடைக்குமோ நிம்மதி யார் அறிவார் அச்சோவே!

கொரோனாத் தொற்று மக்களைத் துரத்தி வருகிறது. தொற்று நிலை குறித்து நாளுக்கு நாள் வெளிவரும் தகவல்கள் அதிர்ச்சி தரு கின்றன.

இதைவிட இராணுவத் தளபதியின் எச் சரிக்கை, சுகாதார அமைச்சின் அதட்டல், அரச மருத்துவ சங்கத்தின் முழக்கம் என்பன வும் சேர்ந்து கொள்ள,

கொரோனாத் தொற்று ஏற்படாமலே உட லில் இருந்து உயிர் பிரியாவிடை பெற்று விடும் போல் உள்ளது.

இதற்கு மேலாக, முகக் கவசம் அணியாமல் சென்றால், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் 6 மாதச் சிறையும் என்ற சட்டம் அமுலாகியுள் ளது.

குறித்த சட்டம் உடன் அமுலுக்கு வந்த நிலையில், அதனைப் பொலிஸார் பின்பற்று வதிலேயே பெரும் இடர்பாடுகளும் கஷ்ரங் களும் உள்ளமை தெரிகிறது.

சிலவேளை முகக் கவசம் அணியாத பொலி ஸார், முகக் கவசம் அணியாத பொதுமக் களைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுத்தாலும் ஆச் சரியப்படுவதற்கில்லை.

இவை ஒருபுறமிருக்க, ஒரு கிலோ சீனி 85 ரூபாய், மீன்றின் 200 ரூபாய், வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாய், பருப்பு ஒரு கிலோ 150 ரூபாய் என அரசாங்கம் விலை நிர்ணயம் செய்துள்ளது.

இருந்தும் இன்னமும் நிர்ணய விலை அமு லுக்கும் அரங்குக்கும் வரவில்லை.

இவை ஒருபுறமிருக்க, எங்கள் வடபுலத் தில் ஒவ்வொரு நாளும் பணம், நகை என்பன திருட்டுப் போகின்றன – கொள்ளை அடிக்கப் படுகின்றன.

இதனால் பொதுமக்கள் வீதியாலும் போக முடியவில்லை. வீட்டிலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

அதிலும் அண்மைக்காலமாக ஒவ்வொரு நாளும் கொள்ளையும் திருட்டும் நடந்து கொண்டே இருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், குறித்த திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்பதுதான்.

காலாகாலமாக களவு நடந்த வண்ண முள்ளபோதிலும் திருடப்பட்ட நகைகள், பணம் எதுவும் இதுவரை மீட்கப்படவில்லை.

அதுசரி; திருடனைக் கைது செய்யாமல் திருட்டுப்போன பொருளை மீட்பது எங்ஙனம் சாத்தியமாகும்.

ஆனாலும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுதான் மிகப்பெரிய சாதனை.

ஆக, இப்போது எங்கள் நாட்டில் கொரோ னாத் தொற்றும் அது தொடர்பில், இராணு வம், மருத்துவம், தொழிற்சங்கம் என்பன விடுக்கின்ற எச்சரிக்கைகள் ஒவ்வொருவர் வீட்டிலும் பேசுபடுபொருளாய் இருக்க,

கள்ளர் கூட்டம் கொரோனாக் காலத்து முகக் கவசம் தமக்குக் கிடைத்த பெருவரப் பிரசாதம் எனக் கருதி, கிடைத்த அருமந்த வாய்ப்பெனப் பயன்படுத்தி பிறர் தேடிய தேட் டத்தைத் தமக்குரியதாக்குகின்றனர்.

அந்தோ! என்று தான் எம் வாழ்வில் நிம் மதியும் ஆறுதலும் கிடைக்குமோ? யார் அறி வார் அச்சோவே.

நியூ டயமண்ட் கப்பல் விவகாரம்
கப்டனின் பயணத்தடையை நீக்க உத்தரவு

(கொழும்பு)

அண்மையில் தீப் பர வலுக்குள்ளான எம்.ரி. நியூ டயமண்ட் கப்பல் கப்ட னுக்கு விதிக்கப்பட்டிரு ந்த வெளிநாட்டு பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த கப்பலின் கிரேக்க இன கப்டனான தீரோஸ் ஹில்லியாஸ் சார்பாக மன்றில் முன் னிலையான சட்டத்தர ணிகள் முன்வைத்த இடை யீட்டு மனு மீதான விசா ரணை நேற்று இடம்பெ ற்றது.

குறித்த மனு கொழு ம்பு பிரதம நீதவான் மொஹமட் மிஹார் முன் னிலையில் விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது கப்பல் கப்டன் சார்பாக மன்றில் முன்னிலையான சட்டத் தரணிகள் தமது கட்சிக் காரர் பிழையை ஒப்புக் கொண்டு 12 மில்லியன் ரூபாய் தண்டப்பணத்தை கொழும்பு மேல் நீதிம ன்றில் செலுத்தி முடித்து ள்ளதாக மன்றுக்கு தெரி யப்படுத்தினர்.

அதனால் தமது கட் சிக்காரருக்கு எதிராக விதி க்கப்பட்டுள்ள வெளிநா ட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு நீத வான் நீதிமன்றத்தில் கப் டன் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கேட்டுக் கொண்டனர். இதற்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரி கள் எதிர்ப்பைத் தெரி விக்கவில்லை.

அதன்படி எம்.ரி. நியூ டயமண்ட் கப்பல் கப்டனு க்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு கொழும்பு நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள் ளது. (ஜ-4)

ஆலயத்தின் கதவினை எரித்து திருட்டு முயற்சி
தச்சன்தோப்பு பகுதியில் சம்பவம்

(சாவகச்சேரி)

நாவற்குழி-தச்சன் தோப்புப் பகுதியில் உள்ள முருகன் ஆலயம் ஒன் றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு கதவினை எரித்து திரு ட்டு முயற்சி ஒன்று இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

தச்சன்தோப்பு முத் துக்குமாரசுவாமி ஆலய த்தின் பிரதான கதவினை உடைத்து குழு ஒன்று உள்ளே சென்று திருட முயற் சித் துள் ளது. இருப்பினும் கதவினை உடைக்க முடியா மையால் அருகில் இருந்த ஓலைகளைப் போட்டு கதவினை எரித்து துளை யிட்டு உள்ளே நுழை ந்துள்ளனர்.

உள்ளே நுழைந்த பின்னர் ஆலயத்தில் கண் காணிப்புக் கமரா இருந் ததனை அவதானித்த திருட்டுக் கும்பல் திருட்டு முயற்சியை கைவிட்டு தப்பித்துச் சென்றுள்ளது. பாதுகாப்பு கண்காணிப்பு கமராவில் பதிவான காட் சிகளை வைத்து சாவ கச்சேரி பொலிஸார் திரு டர்களுக்கு வலைவீசி வருகின்றனர். (மு-03,30)

கடற்றொழில் அமைச்சினால் 68 குடும்பங்களுக்கு குடிநீர் வசதி

(நெளுக்குளம்)

கடற்றொழில் நீரியல் வளங்கல் அபிவிருத்தி அமைச்சின் வாவியுட னான கிராமம் எனும் அபிவிருத்தி செயற்றிட் டத்தின் கீழ் மீனவக் குடும் பங்களுக்கான சுத்திகரிக் கப்பட்ட குடிநீர் வசதி ஏற் படுத்தி பொதுமக்களிடம் கொடுக்கப்பட்டு வரு கின்றது.

அந்தவகையில், வவு னியா மாமடுவ மீனவக் கிராமத்தில் குறித்த செய ற்றிட்டம் முன்னெடுக்கப் பட்டதுடன் கடற்றொழில் அமைச்சின் நிதியில் இர ண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமை க்கப்பட்டு மக்கள் பாவ னைக்காக நேற்று கைய ளிக்கப்பட்டன. இதன் மூலம் 68 மீனவக் குடும் பங்களின் சுத்தமான குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் நிலையத் தின் அதிகாரி யோ. நிசா ந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா தெற்கு சிங் கள பிரதேச செயலகத் தின் உதவி திட்டமிடல் பணிப்பாளர் தவமலர் மனோகராயா மற்றும் உத் தியோகத் தர் கள் கலந்து கொண்டனர்.

(5-4-299)

பண்டாரவன்னியன் சதுக்கம்

(நெளுக்குளம்)

வவுனியாவில் பண் டாரவன்னியனின் சிலை அமைந்துள்ள பகுதி பண் டாரவன்னியன் சதுக்க மாக பெயர் சூட்டப்பட்டுள் ளது.

வவுனியா பண்டார வன்னியன் மறுமலர்ச்சி மன்றத் தின் கோரிக் கையை ஏற்று நகர சபை உறுப்பினர் ரி. கே. இரா சலிங்கம் நகர சபை அமர் வில் முன்வைத்தார். கோரிக்கையை ஏற்ற நகர சபை குறித்த பெய ரைச் சூட்டியது.

குறித்த பகுதி இது வரை காலமும் பற்றோல் செட் சந்தி என அழை க்கப்பட்டு வந்த நிலை யில் குறித்த பகுதிக்கு பண்டாரவன்னியன் சதுக் கம் என பெயர் சூட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக் கைக்கு அமையவே இப் பெயர் சூட்டப்பட்டுள் ளது. (5-299)

சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

மதத்தின் இரகசியம்

❖ நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும், உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்குஒரு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

❖ உடலையும் புலன்களையும் வழிநடத்தும் போது, மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

❖ சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத்தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிட வேண்டும்.

❖ இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும், பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.

❖ மதத்தின் ரகசியம் கொள்கைகளில் இல்லை. செயல்முறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வது தான் மதத்தின் முழுப்பரிமாணமாகும்.

❖ ஒருவன் தன்னை வெறுக்கத் துவங்கிவிட்டால், அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்துவிட்டது என்று பொருள்.

❖ எந்த வேலையாக இருந்தாலும், அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

பெங்களூரை பந்தாடியது பஞ்சாப்

ஐ.பி.எல்.தொடரின் 31ஆவது லீக் ஆட்டம் நேற்று முன்தினம் ஷார்ஜாவில் நடைபெற்றது.

பஞ்சாப் அணிக்கெதிராக டொஸ் வென்ற ஆர்.சி.பி.பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி தேவ்தத் படிக்கல், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் அதிர டியைத் தொடங்க ஆரம்பித்த னர்.

தேவ்தத் 12 பந்தில் 18 ரன்கள் எடுத்த நிலையில் ஆட் டமிழந்தார். பவர் பிளேயில் ஆர்.சி.பி. 1 விக்கட் இழப்பிற்கு 57 ரன்கள் எடுத்திருந்தது.

பிஞ்ச் 20 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். வோஷிங்டன் சுந்தர் 13 ரன்னில் ஆட்டமிழந்தார். ஷிவம் டுபே 23 ரன்னில் வெளியேறி னார். அடுத்து வந்த டிவில் லியர்ஸ் 2 ரன்னில் ஏமாற்றம் அளித்தார். விராட் கோலி அதே

ஓவரில் 48 ரன்னில் வெறி யேறினார்.

ஆர்.சி.பி.18 ஓவர் முடிவில் 137 ரன்களே எடுத்திருந்தது. 19-வது ஓவரில் 10 ரன்களும், கடைசி ஓவரில் 24 ரன்களும் என 12 பந்தில் 34 ரன்கள் அடிக்க ஆர்.சி.பி.20 ஓவரில் 171 ரன்கள் அடித்துள்ளது. கிறிஸ் மோரிஸ் 8 பந்தில் 3 சிக்ஸ், ஒரு பவுண்டரியுடன் 25 ரன் கள் விளாசினார்.

இதையடுத்து 172 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக் குடன் பஞ்சாப் களமிறங்கியது.

கே.எல்.ராகுல், மயங்க் அகர்வால் தொடக்க ஆட்டக் காரர்களாக இறங்கினர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 78 ரன்கள் எடுத்தது. மயங்க் அகர்வால் 45 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ராகுலுடன் கிறிஸ் கெயில் ஜோடி சேர்ந்தார். இரு வரும் அதிரடியாக ஆடி அரைச் சதமடித்தனர்.

இறுதிக் கட்டத்தில் 53 ரன் எடுத்த நிலையில் கெயில் ஆட் டமிழந்தார்.

முடிவில், ஆட்டத்தின் கடைசிப் பந்தில் பஞ்சாப் அணி வெற்றிக்கு தேவையான ரன் களை எடுத்து 8 விக்கெட் வித் தியாசத்தில் வெற்றி பெற்றது.

ராகுல் 61 ரன் எடுத்து ஆட் டமிழக்காமல் களத்தில் இருந் தார். (4)

அதி வேகமாக பந்து வீசிய டெல்லி அணியின் அன்ரிச்



ஐ.பி.எல்.தொடரில் அண் மையில் நடைபெற்ற ஆட்டத் தில் டெல்லி கப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி கள் மோதின. முதலில் விளை யாடிய டெல்லி அணி 7 விக்கெட் இழப்பிற்கு 161 ரன்கள் எடுத் தது.

பின்னர் 162 ரன்கள் அடித் தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி களம் இறங்கியது. டெல்லி அணியின் பந்து வீச்சை தாக் குப்பிடிக்க முடியாமல் அந்த அணியால் 148 ரன்கள் மட் டுமே அடிக்க முடிந்தது.

இந்தக் போட்டியில் டெல்லி அணி வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே புயல் வேகத்தில் பந்து வீசினார். அவர் ஒரு பந்தை மணிக்கு 156.2 கிலோ மீற்றர் வேகத்தில் வீசினார். ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 2012 ஆம் ஆண்டுக்குப்பின் அதிவேகத்தில் வீசப்பட்ட பந்து இதுவாகும் என்பது குறிப்பிடத் தக்கது. 4 ஓவரில் 33 ரன்கள் விட்டுக்கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தி ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

156.2 கி.மீற்றர் வேகத்தில் பந்து வீசியது குறித்து அன்ரிச் நோர்ட்ஜே கூறுகையில் "போட்டி முடிந்த பின்னர்தான் நான் கேட்டுத் தெரிந்து கொண் டேன். அந்த நேரத்தில் எனக் குத் தெரியவில்லை. ஆனால் வேகமாக பந்தை வீசி நான் கடினப் பயிற்சி மேற்கொண் டேன்.

பந்தை வேகமாக வீசிய தால் மகிழ்ச்சி அடைகிறேன். உண்மையிலேயே நான் சரி யான பகுதியில் பந்தை பிட்ச் செய்ய விரும்புகிறேன். இது தான் முக்கியமான விடயம்" என அவர் மேலும் கூறினார். (4)

சர்வதேச போட்டிகளில் டிவில்லியர்ஸ் மீண்டும் ஆட வேண்டும்



டிவில்லியர்ஸ் ஓய்வுக்கு விடைகொடுத்துவிட்டு சர் வதேச போட்டிகளில் மீண் டும் விளையாட வேண் டும் என்று இந்திய அணி யின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அழைப்பு விடுத் துள்ளார்.

உலகின் சிறந்த அதிரடி பட்ஸ்மேன்களில் ஒருவர் டிவில்லியர்ஸ். தென் ஆப் பிரிக்காவை சேர்ந்த இவர் 2018 இல் சர்வதேச போட் டியில் இருந்து ஓய்வு பெறு வதாக திடீரென அறிவித் தார்.

36 வயதான டிவில்லி யர்ஸ் ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணியில் விளையாடி வருகிறார். கொல்கத்தாவுக்கு எதிராக அண்மையில் நடந்த ஆட் டத்தில் அவர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி னார்.

33 பந்தில் 5 பவுண்டரி, 6 சிக்சர்களுடன் 73 ரன் எடுத்தார். பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுக ளத்தில் அவர் ஒருவரால் மட்டுமே அதிரடியாக ஆட முடிந்தது. அவரது ஆட் டத்தை கப்டன் விராட் ஹோலி பாராட்டி இருந் தார்.

இந்த நிலையில் டிவில் லியர்ஸ் ஓய்வுக்கு விடை கொடுத்து விட்டு சர்வதேச போட்டிகளில் மீண்டும் விளையாட வேண்டும் என்று இந்திய அணியின் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி அழைப்பு விடுத்துள்ளார்.

கொல்கத்தாவுக்கு எதி ராக டிவில்லியர்சின் ஆட்டம் அற்புதமாகவும், அதிசய மாகவும் இருந்தது. இதை பார்க்கும்போது கனவா? நினைவா? என்று எண்ண தோன்றியது.

இதனால் நீங்கள் மீண் டும் சர்வதேச கிரிக்கெட் போட்டிக்கு விளையாட வாரு ங்கள். என டிவில்லியர் ஸிற்கு அழைப்பு விடுத்துள் ளார். (4)

சிக்கலில் மாட்டிய தென்னாபிரிக்க அணி; தடைவிதிக்குமா ஐ.சி.சி?

விதிகளை மீறியதால் தென் னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கு மொத்தமாக தடை விதிக்க ஐ.சி.சி. நிர்வாகம் ஆலோசனை செய்து வருவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

ஐ.சி.சி. விதியின்படி ஒரு நாட் டின் கிரிக்கெட் நிர்வாக விவகா ரங்களில் அரசு தலையிட்டால் அந்த கிரிக்கெட் அணிக்கு ஐ.சி.சி. தடை விதிக்க முடியும்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபையில் இருக்கும் உறுப்பி னர்கள் ஊழல் செய்துவிட்டதாக அந்த நாட்டில் புகார் எழுந்தது. இதை விசாரிக்க வேண்டும் என்று அந்நாட்டு விளையாட் டுத்துறை அமைச்சகம் உத்தர விட்டது.

சில முக்கியமான நபர்கள் அரசின் விசாரணையில் இரு ந்து தப்பித்ததை அந்நாட்டு விளையாட்டுத்துறை அமைச் சர் கண்டுபிடித்தார்.

இதன் காரணமாக தென் னாபிரிக்க கிரிக்கெட் சபை மீது மீண்டும் விசாரணை முன் னெடுக்கும் முடிவை அந் நாட்டு விளையாட்டுத்துறை அமைச் சர் நதி மதேத்வா எடுத்துள் ளார்.

இது தொடார்பாக அவர் ஐ.சி.சிக்கும் தகவல் தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

அணியின் நிர்வாகத்தில் அரசு தலையிட்ட காரணத்தால் விரைவில் அணிக்கு தடை விதிக்கப்படலாம் என்று தகவல் கள் வெளியாகியுள்ளன. (4)

யாழ்.நகரில்...

போதனா வைத்திய சாலைக்கு முன்பாக நேற்று மோட்டார் சைக்கிளில் சந்தேகத் திற்கிடமாக நின்ற இளைஞனிடம் இருந்தே கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 22 வயது மதிக்கத்தக்க கிளி நொச்சி, பரந்தன் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரையே யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றதாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,101)

சுவர் இடிந்து...

வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 44 வயதுடைய அரியாலை பகுதியைச் சேர்ந்தவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,101)

பெண் ஒருவர்...

பெண்ணொருவர்சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த 56 வயதான பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

வடமராட்சியை...

சுவிஸ் நாட்டில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் சுவிஸ் நாட்டில் வசித்து வரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான கொன்சன்ரைன் றதீஷ் (வயது - 43) என்பவராவார்.

வடமராட்சி கிழக்கு, மாமுனையைச் சேர்ந்த இவர் சுவிஸில் வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு வீதி ஒன்றைக் கடக்க முற்பட்டபோது விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,60)

யாழ்.மாநகர...

மாநகர சபையின் உறுப்புரிமையில் இருந்து நீக்குமாறு, உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை செயலாளருக்கும் இந்தக் கடிதத்தின் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அரசியல் இயக்கத்துடன் இணைந்து பயணிக்கின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சிபாரிசின் அடிப்படையில், 2018 உள்ளூராட்சித் தேர்தலில் விஸ்வலிங்கம் மணிவண்ணன், எமது கட்சியின் நியமன உறுப்பினராக யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டார்.

எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒழுக்காற்று நடவடிக்கையால், விஸ்வலிங்கம் மணிவண்ணன், அந்தக் கட்சியிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டுள்ளார்.

அதனால் அவரை யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்புரிமையிலிருந்து நீக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்" என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்து சட்டத்தரணி வி. மணிவண்ணனை நீக்கக் கோரி, மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீளப் பெறப்பட்ட அதே நாளிலேயே இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவாகிய மயூரனின் உறுப்புரிமையையும் நீக்குமாறும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கோரியுள்ளது. (ம-3)

தமிழ்க் கட்சி...

ப்பை விடுத்திருக்கிறார்.

"தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் 20ஆவது திருத்தம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பவற்றுடன் எதிர்காலத்தில் இணைந்து செயற்படுவதற்கான வேலைத் திட்டங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்படும்" என மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

"ஏற்கெனவே நாம் சந்தித்துப் பேசியிருக்கிறோம். ஒரு உண்ணாவிரதப் போராட்டம், ஹர்த்தால் என்பவற்றை இணைந்து நடத்தியிருக்கிறோம். இந்த நிலையில் அடுத்த கட்டச் செயற்பாடுகளையிட்டு நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

குறிப்பாக 20ஆவது திருத்தச் சட்டம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பன குறித்து மற்றைய கட்சிகளின் கருத்துக்களை அறிய வேண்டியுள்ளது.

அதனைவிட தமிழ் மக்களுடைய உரித்துக்கள், அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து நாம் சில முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது.

ஒன்றாக இணைந்து செயற்படக் கூடிய இந்த சந்தர்ப்பத்தில் அடுத்த கட்டமாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையிட்டு இன்றைய சந்திப்பில் முக்கியமாக ஆராய வுள்ளோம்" எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

மேலும் இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பங்குபற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

யாழ்.மருதங்...

கான மருத்துவமனை 19ஆம் திகதி பூர்த்தியாக்கப்படவிருக்கின்றது.

இதன்மூலம் யாழ்.மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டால் மருதங்கேணி கொரோனா சிகிச்சைக்கான மருத்துவமனையிலேயே சிகிச்சையளிக்கப்படும்.

மேலும், மருதங்கேணி வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவு பிறிதொரு கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

மேலும், கிளிநொச்சி மாவட்டத்திற்கான கொரோனா சிகிச்சைக்கான மருத்துவமனை கிருஷ்ணபுரம் பகுதியில் அமைக்கப்படவுள்ளது.

இதன் பணிகள் 2 வாரங்களுக்குள் முடிவுறுத்தப்படவுள்ளது. சுமார் 100 படுக்கைகள் கொண்டதாக இந்த மருத்துவமனை அமைக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி நிலையம் அமைந்திருந்த வளாகத்தில் இந்த மருத்துவமனை அமைக்கப்படுகின்றது. (ம-3)

ஆப...

வித்துள்ளார்.

ஏற்கெனவே அதி ஆபத்து என்று கருதப்பட்ட பிரதேசங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாத்திரம் 74 பேர் கொரோனாத் தொற்றுடன் கண்டறியப்பட்டனர். இவர்களில் 22 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தும் 52 பேர் தொற்றாளிகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தும் கண்டறியப்பட்டனர்.

மினுவாங்கொட, கட்டுநாயக்க மற்றும் கம்பஹா பகுதிகளில் இருந்தே இவர்கள் கண்டறியப்பட்டனர்.

இதேவேளை, கொழும்பில் இருந்து இரண்டு தொற்றாளிகளும் வத்தளை மற்றும் கந்தானையில்இருந்தும் தொற்றாளிகள் கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். (ம-3)

தமிழ்க் கட்சிகள்...

விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சட்டத்தரணி சிறிகாந்தாவுக்கு 40 வருட அரசியல் அனுபவமும் திறமையும் அதே நேரம் பணிவும் இருப்பதாகவும், எனவே, அனைத்து தமிழ்க் கட்சிகளும் சிறி காந்தாவின் தலைமையில் ஒன் றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ம-3)

நாட்டில் மேலும்...

பணிபுரிபவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்கள் என வும் ஏனைய 75 பேர் குறித்த தொழிலாளர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இதுவரை மினுவாங்கொட கொரோனாத் தொற்று கொத்தணியில் பதிவான கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 899 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இதுவரை நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஐயாயிரத்து 354ஆகப் பதிவாகியுள்ளது. (ம-3)

மெகா பவர்
திகதி 16/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0644
வெற்றி எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 16 | 26 45 51 68

நீரோகா
திகதி 16/10/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0712
லக்கினம் துலாம் | வெற்றி இலக்கங்கள் 30 34 53 67

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16-10-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2572
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கங்கள் 31 69 70 75

தன நிதானய
திகதி - 2020.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 329
R | 04 19 22 75
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

மஹாஜன சம்பத
திகதி 2020/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 4277
ஆங்கில எழுத்து W | வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 3 9 6 4 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1247 | நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 16.10.2020 | தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Y 24 27 42 73 | 50,000,000.00
SUPER 500 | 2 4 6 3

ராசி
திகதி 16/10/2020 | வெற்றி வாரம் 2954
சுப்பர் ஜக்பொட் ரூ. 20,00,000 | வர்ணம் கரு நீலம்
வெற்றி இலக்கங்கள் 14 18 36 45 | கன்னி
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
ரூ.500 பரிசுக்குரிய 6147
ரூ.100 பரிசுக்குரிய 865
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,374,120

Q 09 11 30 72
சீட்டிழுப்பு வாரம் 638
வர்ணம் பச்சை
திகதி 16.10.2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,362,350
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

அது கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1073
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2020.10.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 78,765,495/-
வெற்றி இலக்கங்கள் 01 04 34 72 | ஆங்கில எழுத்து R
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2553
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 352
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.10.16
சீட்டிழுப்பு இல. : 3403
வர்ணம் : ஆரஞ்சு
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,308,329.20
வெற்றி இலக்கங்கள் 11 31 64 74 | ஆங்கில எழுத்து K
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 1027
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

புதிய வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ள

கொரோனாத் தடுப்பு சட்டங்களில் பொலிஸார் தவறு செய்யமாட்டார்கள்

சுகாதார அமைச்சர் பவித்திரா உறுதி

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் மற்றும் கோவிட் - 19 நோய்த் தடுப்பு கட்டளைச் சட்டம் தொடர்பில் புதிதாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளை பொலிஸார் தவறாகப் பயன் படுத்தமாட்டார்கள் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி உறுதியளித்தார்.

கோவிட் - 19 நோய்ப் பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்கே பொலிஸார் இந்த சட்டத்தைப் பயன்படுத்துவார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை யளிக்கும் மருத்துவமனைகளின் எண் ணிக்கை 21 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தினசரி பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை 8 ஆயிரமாக உயர்த்தப் பட்டுள்ளது. அதற்காக ஆய்வுகூடங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் படுகின்ற போதும், இலங்கை தொடர்ந்தும் கோவிட்-19 நோயாளர்களை மருத்து வமனைகளில் தங்கவைத்து சிகிச்சை வழங்குகின்றது.

கொரோனா எதிர்ப்பு சட்டங்கள் உள்ள டக்கிய புதிய வர்த்தமானி அறிவிப்பின் விதி முறைகள் எந்த வகையிலும் முறை கேடு செய்யப்படாது. வர்த்தமானியில் உள்ள விதிகளை பொலிஸாரும் தவறாகப் பயன் படுத்தமாட்டார்கள். கோவிட் -19 நோய்ப் பரவல் தணிப்புத் தொடர்பான விதிமுறை களை நடைமுறைப்படுத்துவதற்கு மட்டுமே பொலிஸார் கவனம் செலுத்துவார்கள்" என்றும் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார். (ம-03)

வீடு மற்றும் கார் மீது வாள்வெட்டுக் குழு தாக்குதல்

கோண்டாவில் கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் கோண்டாவில் கிழக்கு - அரசடி பகுதியில் உள்ள வீடொன் றின் மீது நேற்றிரவு வாள்வெட்டுக் கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

நேற்றிரவு இரு மோட்டார் சைக்கிள் களில் முகத்தை மறைத்தவாறு வந்தவர் களே இத்தாக்குதலை நடத்திவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

தாக்குதலில் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றும், வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்களும் சேதமாக் கப்பட்டுள்ளது. (ம-03)

தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு வேலை களை ஒப்பந்த அடிப்படையில் சிறந்த முறையில் செய்து தரக்கூடிய மேசன், கூலியாட்கள் தேவை. (4280)

076 316 5734, 077 985 1946

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், வசாவிளான், குட்டியபுரம் அம்மன் கோவில் முன்பாக மெயின்றோட் டுடன் 21 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ஒரு பரப்பு மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (350,000/-) (4292)

தரகர் தேவையில்லை.

076 640 0974, 076 888 4625
077 998 6806

விற்பனைக்கு

குட்டித்தாச்சி சணல் ஆடு விற்பனைக்குண்டு.

தொடர்பு

077 663 1742 (C-541)

ஜோதிடம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (4278)

தொடர்பு - 077 572 9724

காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மில் வீதியில், நாதன் பிரான் கோயிலுக்கு அருகாமையில் 28 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **1 பரப்பு 5 இலட்சம் ரூபாய்.** 2 பரப்புக்களாக பிரித்துக் கொடுக்கப்படும். **(தரகர் தேவையில்லை.)** (4282)

077 190 4814

குங்குமம் திருமாங்கல்ய சேவை

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளை களின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள். (4278)

தொடர்பு

077 572 9724, 076 788 7677

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஊரெழு, பொக்கன் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. **(தரகர்கள் தேவையில்லை)** (4292)

077 623 4204

SB Travels - மீண்டும் எமது சேவையை ஆரம்பித்துள்ளோம்!

சகல விதமான பயணச் சீட்டுகளிற்கான நேரடி முகவராக (IAIA Agent) செயற்படும் SB Travels and Tours Pvt Ltd. சகல நாடுகளிற் கான விமான பயணச் சீட்டுக்கள், Travel Itinerary, Travel Insurance, ஐரோப்பிய நாடுகளிற்கான Online VFS Appointments, விசா விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்தல் மற்றும் விமானப் பயணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து தருகிறது.

தொடர்புகளிற்கு :

SB Travels and Tours Pvt Ltd.

No. 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 222 8555 / 9555

M.P : 077 108 3480 / 076 691 1082 (C-523)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

ENGLISH CLASSES

Gr. 1 to O/L

Grammar with Syllabus

(வீடு வந்து கற்பிக்கப்படும்.) (4285)

T.P : 077 331 4608

வீடு விற்பனைக்கு

மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணி யுடன் நல்ல நிலையில் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு.

(தரகர்கள் தேவையில்லை)

சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். (C-540)

077 778 7545

மணமகள் தேவை

இலங்கையில் பிறந்து Switzerland இல் நிரந்தரமாக வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பப் பெற்றோர் தமது 48 வயதுடைய சுயதொழில் புரியும் மகனுக்கு நற்பண்புள்ள, அழகிய மணப் பெண்ணைத் தேடுகிறார்கள். மணமகளின் ஜாதகம் மற்றும் சமீபத்திய புகைப்படம் மற்றும் ஏனைய விபரங்களுடன் பின்வரும் மின்னஞ்சலுடன் தொடர்பு கொள்ளவும். (4204)

Jeyaratnam1988@gmail.com 077 219 4331

அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2022ல் நீங்களும் அமெரிக்காவில்..

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226241

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 10-11-2020

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

யாழ்ப்பாணம் 0768226243	கிளிநொச்சி 0768226240	நெல்லியடி 0776699892	சாவகச்சேரி 0768226242	திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238	சுன்னாகம் 0764550670	புதுக்குடியிருப்பு 0764550673	பருத்தித்துறை 0768226230	வல்வெட்டித்துறை 0776697960

V2 Travels www.facebook.com/v2tandt

பதவி வெற்றிடம்

பதவி நிலை :-	அலுவலக வெளிக்கள உத்தியோகத்தர்
வயதெல்லை :-	25 தொடக்கம் 35 வரை
கல்வித் தகைமை :-	A/L
பிற தகைமை :-	வேலை அனுபவச் சான்றிதழ்

விண்ணப்பதாரர் யாழ். மாவட்டம், மன்னார், கிளிநொச்சி மாவட்டம் வசித்தல் விரும்பத்தக்கது. (C-537)

மேலதிக தொடர்புக்கு :- 077 076 0115

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1025 1=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள் (C-308)

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,4 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.